விளம்பர விதிதங்களுக்கு:
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
•
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 24-ந் திகதி வியாழக்கிழமை — பிரசுரம் 10 | 46-ம் இலக்கம்.

23-ம் அருளப்ப பாப்பரசர் தமது 80-வது வயதைத் தொடங்குகின்றார்

எமது பொதுத்தந்தை 23-ம் அருளப்ப பாப்பரசர் இம்மாதம் 25-ந்திகதி தமது 80-வதுபிறந்த தினத்தைக் கண்டுகளிக்கவிருக்கின்றார். அவர் 1881-ம்ஆண்டு கார்த்திகைமாதம் 25-ந்திகதி வட இத்தாலியில் பேர்கமோநகருக்கு அருகாமையிலுள்ள சொத்தோ இல மொன்தே எனும் சிறுகிராமத்தில் பிறந்தார். ஞானஸ்நானத்தின் போது அவருக்கு ஆஞ்ஜெலோ யுசெப்பே ரொங்கல்லி என்னும் பெயரிட்டனர்.

கடந்த 79 ஆண்டுகளிலும் ஆஞ்ஜெலோ ரொங்கல்லி பற்பலதுறைகளில் திருச்சபையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைத்துவந்திருக்கின்றார். 1904-ம்ஆண்டு குருப்பட்டம் பெற்றபின், தமது மேற்றிராணியாரின் அந்தரங்க காரியதரிசியாகவும், பட்டாளத்தில் செஞ்சிலுவைச் சங்க அதிகாரியாகவும், இத்தாலிதே சத்தின் விசுவாசப் பரப்புதல் சபைத் தலைவராகவும், பல்கேரியா, துருக்கி, பிராஞ்சு ஆதியாம் நாடுகளில் பாப்பரசரின் தூதுவராகவும், வெனிஸ் பட்டணத்துப் பிதாப் பிதாவாகவும் கடமையாற்றியுள்ளார். இறுதியாக, 12-ம் பத்திநாத பாப்பரசர் காலஞ்சென்ற பின்னர் 1958-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ந் திகதி திருச்சபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு, அடுத்தமாதம் 4-ந் திகதி முடி சூட்டப்பெற்றார். இம்முடி சூட்டு விழாவின் இரண்டாம் வருடஞாபகத்தை நாம் அண்மையில் குதூகலத்துடன் கொண்டாடினோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் நம் பரிசுத்ததந்தை திருச்சபையின் விருத்திக்கென சிலமகத்தான திட்டங்களை வகுத்துவந்திருக்கின்றார். திருச்சபையின் நீண்ட சரித்திரத்திலே முன்னேற்றத்திற்கு நன்குதவிய சாதனங்

[தொடர்ச்சி 6-ம் பக்கம்]

30,000 கத்தோலிக்கர் முள்முடி சூடிப் பவனிவந்தனர்

ஏழு விசாரணைப்பங்குகள் கலந்துகொண்டன

30,000 கத்தோலிக்கர் சென்ற 13-ந்திகதி தலைகளில் முள்முடி சூடிக்கொண்டு பெரியதோர் சிலுவை முன்செல்ல, பெருமழையையும் பொருட்படுத்தாது எட்டு மைல் நீளமான பச்சாத்தாபச் சுற்றுப்பிரகாரத்தில் கலந்துகொண்டனர். சுற்றுப்பிரகாரம் வத்தளையில் ஆரம்பமாகி, கேகிற்ற, பெலியவத்தை, நெந்தலை, கல்வெற்றியா, கேறவலப்பிட்டியா, நாயகாகந்த, மாபோல்ல என்ற விசாரணைப்பங்குகளுக்கூடாகச் சென்று மத்துமாகலையை அடைந்தது.

துக்கத்தின் அடையாளமான ஆடைகளை அணிந்து, ஒவ்வொரு வரும் ஒரு சிலுவையைச் சுமந்து சென்றனர். மழை பெய்துகொண்டிருந்தபோதும் இப்பிரமாண்டமான ஊர்வலம் தொடர்பாக நடந்துகொண்டேயிருந்தது. மக்கள் ஒருவரும் சுற்றுப்பிரகாரத்தைவிட்டு வெளியேறத் துணியவில்லை.

தங்களுடைய வருங்காலச் சந்ததியாரை எதிர்நோக்கியிருக்கும் பேராபத்து நேராவண்ணம் மனஸ்தாபத்துடனும், உருக்கத்

[தொடர்ச்சி 6-ம் பக்கம்]

மன்னர் மாதோட்டக்கத்தோலிக்கரின் மாபெருங் கூட்டம்

"கங்கோரியிலும், போலாந்திலும் நடைபெற்ற விடயங்களை அறிந்திருக்கிற நீங்கள் இலங்கை அரசாங்கம் தற்பொழுது மேற்கொண்டிருக்கிற திட்டங்கள் பற்றி எச்சரிக்கையாக விருங்கள்"

இவ்வாறு திரு. குவின்ரின் பெலன்டோ, மன்னரில் நடைபெற்ற கத்தோலிக்கரின் மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்திற் கூறினார். 12-11-60 அன்று அர்ச். சவேரியார் கல்லூரிமண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு மன்னர் சிரேஷ்டகுரவர் அதிவண. பிதா ஜி. ரி. பாலசுந்தரம் ஓ. எம். ஐ. தலைமைதாங்கினார். பள்ளிமுனை, தாழ்வுபாடு, வங்காலை, பேசாலை, அரிப்பு, விடத்தற்தீவு, தலைமன்னார், அடம்பன் ஆகிய பல இடங்களிலுமிருந்து பல்லாயிரக் கணக்கானமக்கள் சமுகமளித்தனர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "புண்ணிய பூமியான மன்னரிற் கால்வைத்து வேதசாட்சிகளின் மக்களாகிய உங்களுக்குப் பேசுவதையிட்டு நான் பெருமையடைகிறேன். இலங்கையில் நமக்கு எதிராக உருவாகும் திட்டங்கள்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

பௌத்த காங்கிரஸ்

"கத்தோலிக்கர்மாத்திரம் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை எதிர்க்கவில்லை. பௌத்தர்கள்கூட எதிர்க்கின்றனர் என்பதை நான் துணிவாக

[தொடர்ச்சி 3-ம் பக்கம்]

பாப்பரசர் பல்லாண்டு வாழ்க!

("கலையே உன் விழிகூட"..... என்ற மெட்டு)

பல்லவி

தலைவா உம் திருநாமப் புகழ் பாடவே — தேவன்
இடமாக உலகாளும் அருள்வேந்தனே — அருள்வேந்தனே!

சரணம்

1. அருள்ஞான ஒளிதாங்கும் மனமாளும் வேந்தே,
இருள்பாவ அலகை இடரின்றி உலகை,
வழுவாது காக்கும் சிரசே எம்திருவே — (தலைவா)

2. வெண்பொன் ஒளிவீசும் கொடிகொண்ட வேந்தே
விண்ணவர் எத்தும் புகழ்மேவு திருவே
கண்ணிமை போலே எமைக்காப்பாய் நிதமே — (தலைவா)

3. பார்போற்றும் பாப்பு நீ பல்லாண்டு வாழ்க,
பரன்ஆசி உன்மேல் என்றுமே ஓங்க,
புகழ்பாடி நின்றோம் சேயர்நாம் இன்றே — (தலைவா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க ஐக்கியசங்கம் பிரதமருக்குப் பதிலளிக்கின்றது

(சென்றவாரத் தொடர்ச்சி)

சமசந்தர்ப்பம்.

ஏழைகட்கும், செல்வந்தர்கட்கும் சம சந்தர்ப்பமளிக்க அரசினர் கொண்டுள்ள கருத்தையிட்டு நாங்கள் சகலரும் அக்களிப்பு அடைகிறோம். ஏழைகளுள் மிக ஏழைகளாகியவர்களிடமிருந்து நான் வந்தபடியால் எமது இந்த நாட்டில் மிகப்பெரும்பகுதியாயுள்ள ஏழைப்பிள்ளைகள் இதனால் அடையும் பயனைப் பூரணமாக விளங்கிக் கொள்கிறேன். சென்ற கால அரசாங்கங்கள் கிட்டத்தட்டச் சகல தொகுதிகளிலும் மத்திய கல்லூரிகளை நிறுவியதன் மூலமும், மாஜிக் கல்வி மந்திரி தனது காலத்தில் ஒரேசீராக விஞ்ஞான ஆய்வுகூடங்களின் அவசியத்தைவிளக்கி விஞ்ஞானக் கல்வியைப் போதிக்க அப்பாடசாலைகட்கு வசதிகளை நல்கியதினாலும், பழைய உதவிபெறும் பாடசாலைகளுடன் அவற்றைச் சமமாக இருக்கச் செய்துவிட்டனர் என்பதைப் பணிவுடன் தங்கட்கெடுத்தியம்புகிறேன்.

சென்ற, சர்வகலாசாலைப் புகுமுகத் தேர்வுப் பரீட்சை முடிவுகள் வெளியாகிய பட்டியலிலிருந்து கிராமப்புறப்பிள்ளைகளும் தங்கள் கொள்கையின் பலன்களை ஏற்கனவே அடைந்து விட்டார்கள் என்பது வெட்டவெளிச்சமாயிற்று. காலகதியில் அவர்கள் எல்லோரும் மருத்துவ, சட்ட, பொறியியல் தொழில்களிலும் அரசாங்க சேவையிலும் உயர்ந்த பதவிகளைக் கைப்பற்றுவர்.

உதவிபெறும் பாடசாலைகளின் பெயர்களை அரசாங்க பாடசாலைகள் என்று மட்டும் மாற்றிவிட்டால் மேற்கூறியவர்களின் தொகை அதிகரிக்கப்போவதில்லை; ஏனெனில் எந்தப் பாடசாலையிலும் மேலதிகமாக இடம் இல்லை. எவ்வித கல்விப் பயிற்சியும் பெறுத பிள்ளைகள் ஏறக்குறைய 400,000 உளர் என்பது யாவரும் அறிந்த விடயம். அரசாங்கம் அத்துணை ஆர்வத்துடன் விரும்பும் சமசந்தர்ப்பம் இவர்களுக்கு ஒருபோதுமே கிடையாது. மறைந்து கிடக்கும் இவர்களின் ஆற்றல்கள் என்றுமே நாட்டிற்குப் பிரயோசனமற்றவையாய்ப் போய்விடும்.

ஏமாற்றுப் பேச்சு.

கௌரவ பிரதமமந்திரி குறிப்பிட்டபிரகாரம் 1951-ம்ஆண்டில் ஒரேஒரு கத்தோலிக்க பாடசாலை மாத்திரமே பிரத்தியேகமான பாடசாலையாக இயங்க விரும்பிற்று. ஏனெனில், 1951-ம்ஆண்டின் 5-ம்இலக்கக் கல்விச்சட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் 2-ம்விதியின்படி 1951-ம்ஆண்டுக்குப் பிற்பாடு விரும்பிய எந்நேரமும் கல்விஅதிகாரிக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டுத் தனித்தியங்கும் உரிமை எல்லாப்பாடசாலைகட்கும் கொடுக்கப்பட்டிருந்தது.

கத்தோலிக்கர் வாக்களித்தல் மூலமாகத் தங்கள் பாடசாலைகளைக் கட்டணம் அறவிடும் தனியார் பாடசாலைகளாக நடாத்தலாம் என்றகூற்று வெறும் ஏமாற்றுப் பேச்சாகவே இருக்கின்றது. ஏனெனில், இச்சலுகை முதற்றர, இரண்டாந்தர ஆங்கில பாடசாலைகட்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. கல்வி ஒழுங்குத் தொகுப்பின்பிரகாரம் பெருந்தொகையான கத்தோலிக்க பாடசாலைகளும், கன்னியர்மடங்களின் பாடசாலைகளும் ஒன்றில் மூன்றுந்தரப் பாடசாலைகள் அல்லது சுயபாஷைப் பாடசாலைகள்.

நாம் எவ்வித சலுகையையும் கோரவில்லை

இலங்கைக் கத்தோலிக்கரோ, அன்றேல் அவர்களின் மேற்றிராணிமாரோ எவ்விதசலுகையையும் கோரவில்லை. அவர்கள் பிரயாசப்பட்டுச் சுட்டிக்காட்டியதுயாதெனில் தேசியத்திட்டமும், அரசாங்கத்திட்டமும்ஒன்றல்ல என்பதே. ஆகவே, சகல பாடசாலைகளையும் அரசாங்க பாடசாலைகளாக்குவதைவிடுத்து, தற்போதைய தேசியத்திட்டத்தின் பயன்களாகிய சுயபாஷைமூலம் இலவசக்கல்வி, ஏழைக்குழந்தைகட்குச் சமசந்தர்ப்பம் அளிக்கும் வசதிகள் ஆதியன தொடர்ந்து சமூகத்தின் எல்லாப் பிரிவுகட்கும் அதிகமாக அளிக்கப்பட வேண்டும். இதை அடைவதற்குச் சகலபாடசாலைகளையும் ஒரேசீரான சர்வாதிகார அரசாங்கத்திட்டத்தின்கீழ் கொண்டுவரவேண்டியதில்லை. இத்தகைய நடவடிக்கை மார்க்சியவாதிகளின் இருதயத்திற்குத்தான் இன்பமூட்டுவதாயிருக்கும்.

பௌத்தரின் முறையீடு

கடந்த சிலஆண்டுகளாக பௌத்த கல்விமான்களும், பேச்சாளர்களும் எடுத்துக்காட்டும் முறைப்பாடுயாதெனில் கத்தோலிக்கர்கள் தங்கள் பிள்ளைகட்குக் கத்தோலிக்க சூழலை வற்புறுத்துங்கால், கிறிஸ்தவ பாடசாலைகளில்கல்விபயிலும்பெருந்தொகையான பௌத்தகுழந்தைகள் பௌத்தமத சூழ்நிலையில் பயிற்றப்பட அவர்கட்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வில்லைஎன்பதே. இம்முறையீடு எவ்வளவுக்குக் கசப்பானதாக இருக்கிறதோ அவ்வளவு உண்மையானதே. எப்படியிருப்பினும் இன்றைய ஆர்வமிக்க பௌத்தர்களும், விறைப்பான தேசியவாதிகளும் கிறிஸ்தவ பாடசாலைகளிலேயே உருவாக்கப் பட்டவர்கள் என்பது அப்பாடசாலைகட்குப் பெருமையளிக்கக் கூடியதே. எனினும், இவ்வுண்மை அவர்கள் விவாதத்தின் வலிமையைக் குன்றச் செய்யவில்லை. அரசாங்கத்தால் விடுக்கப்படும் எந்தத்திட்டத்தினதும் பிரதானநோக்கம் மேற்கூறிய முறைப்பாட்டைத் தீர்த்துவைத்தலாகவே இருக்கவேண்டும். "தேசிய" என்றசொல்லை "அரசாங்க" என்றகருத்துப்பட உபயோகித்துவிட்டால் அவர்களுடைய முறையீடு உண்மையில் அற்றுப்போக முடியாது. கத்தோலிக்கராய நாங்கள் இப்பிரச்சினையை நேர்நேராகநோக்கித் தீர்வுகாண ஆயத்தராயிருக்கிறோம்.

உண்மையான
தேசிய கல்வித்திட்டம்

எங்கள் இந்தஅருமையான நாட்டில் உண்மையான தேசியகல்வித் திட்டம் பன்னசாலைகளிலும், பிரிவெனாப் பாடசாலைகளிலுமே தங்கியிருந்தது. அத்திட்டத்தின் நோக்கம் பிள்ளைகளை மதசூழலில் கல்விபுகட்டுவதே; அதாவது, பௌத்தமதசூழலில் என்பதாம். இவ்வடிப்படைக் கருத்தை நான் அழுத்தந் திருத்தமாகக் கூறவிரும்புகிறேன். நிதானபுத்தியுள்ள எந்தக்கத்தோலிக்கனும் இத்திட்டத்தின் மேன்மையையும், அதால்விளைந்தபயன்களையும் மறுக்கமுடியாது. இன்றையதிட்டம் உண்மையில் தேசியத்திட்டமாக இருக்கவேண்டுமாயின், தற்கால தேவைகளைப்பூர்த்திசெய்யுமுகமாக அதைத் திருத்திப் புனருத்தாரணம் செய்யுங்கள். பிறமதத்தினர் அதிகமாக வாழும் சிலஇடங்களைத்தவிர ஏனைய இடங்களிலுள்ள எல்லாஅரசாங்க பாடசாலைகளும் பௌத்தபிள்ளைகளுக்கு அவசியமான பௌத்தசூழலைக் கொடுக்கட்டும். வரியிறுக்கும் கத்தோலிக்கராயநாம் இன்றைக்கோ, அன்றேல் பௌத்ததலைவர்களின் முறையீடு நிவர்த்திசெய்யப்படுமளவுக்கோ இதையிட்டுமனஎரிச்சல் கொள்ளப்போவதில்லை. இங்ஙனம் மதஅடிப்படையிலமைந்த உண்மையான ஒருதேசியதிட்டத்தை அரசாங்கம் தனது சொந்தச் செலவிலேயே ஏறக்குறைய சகல பௌத்த பிரசைகட்கும் அளிக்கும். சிறந்த சகிப்புத்தன்மையைக்கடைப்பிடிக்கும் பௌத்தர்கள்கூடத் தங்களுடைய பன்னசாலைப் பாடசாலைகளில் "பைபிளையோ," "குர்ஆனையோ" கற்பித்திருக்க மாட்டார்கள்; பௌத்த சூழலிலே அமைக்கப்பட்டுள்ள அரசாங்க பாடசாலைகளிலும் இதை அனுமதிக்கவேண்டிய அவசியமில்லை.

[வளரும்]

ஆசிரியருக்குக் கடிதம்

இந்த ஏழைக் கத்தோலிக்க மக்கள் யார்?

ஐயா,

'கல்விமசோதா கத்தோலிக்கருக்கு மாத்திரம் பாதகமானமசோதா' என்று நாம் துணிந்து வெளிப்படையாகக் கூறத்தக்கவகையில் நிகழ்ச்சிகள் ஒன்றன்பின்ஒன்றாக நிகழ்ந்துவருகின்றன. இக்கவலையில் ஊறிக்கிடக்கும் எமக்குப் பிரதமரும், அவர்சகாக்களும் அடிக்கடிகூறிவரும் ஏமாற்றுவார்த்தைகளால் வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சுகிறார்கள்.

'சலுகை' என்றோர் ஓலம்கேட்டது; 'சனநாயகதர்மம்' என்றொருகூக்குரல் எழுந்தது; 'பொறுப்புணர்ச்சியற்றவர்கள்'எனப் பொய்ப்பிரசாரம் பரந்தது. பத்திரிகைகள் இவற்றிற்குச் சான்றுபகர்கின்றன. 'கல்விமசோதா' பற்றிய கடந்தமேற்சபை விவாதத்தின்போது பிரதமர் இன்னுமொரு நவீன பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார்.

"பெரும்பான்மையான ஏழைக் கத்தோலிக்கமக்கள் இலவசக் கல்வித்திட்டத்தையே விரும்புகின்றார்கள்"

பிரதமரை ஆதரித்து நிதிமந்திரியும் **"உங்கள் பாட்சாலைகள் சிறந்தவையெனின் அவற்றை ஏழைமக்களுக்கும் திறந்துவிடுங்களேன்"** என்று விளம்பிடுக்கிறார். சூழ்ச்சிநிரம்பிய இவ்வார்த்தைகளைக் கேட்கும்போது என்உள்ளம் சூளைபோல் எரிகிறது. பொதுமக்கள் நடுவில் திரித்துவிட்டிருக்கும் இப்பிளவுவார்த்தைகள் அருவருக்கத்தக்கவை. "பெரும்பான்மையான ஏழைக்கத்தோலிக்கமக்கள்" என்பது பிழை. ஏழைக் கத்தோலிக்க மக்களாகிய நாமெல்லோருமே இலவசக் கல்வித்திட்டத்தை விரும்புகின்றோமா? யார் இல்லையென்று மறுத்தார்கள்? விரும்பியதுமட்டுமன்றிச் செயல்முறையிலும் செய்துகாட்டினோம். 1951-ம் ஆண்டு எங்கள் மகாவந். மேற்றிராணிமார்கள் ஒரேயொரு பாட்சாலையைத்தவிர மற்றைய கத்தோலிக்க பாடசாலைகள் யாவும் இலவசக் கல்வித்திட்டத்தின்கீழ் இயங்கிவர வேண்டுமென்று விரும்பினார்கள். அரசாங்கம் இப்போது அனுமதித்தாலும், எல்லாப்பாடசாலைகளையும் இலவசக்கல்வித் திட்டத்தின்கீழ் ஒருமித்து நிர்வகிக்கத் தயாராயிருக்கிறோம். இதற்காக எதுவிதஇன்னலையும் மனப்பூர்வமாக ஏற்போம்.

நிற்க, கத்தோலிக்கமக்களில் ஏழைகள்யார்? செல்வர்யார்? நான்முன்பு கூறியதுபோல நாம் எல்லோருமே ஏழைகள்தாம். விரல்விட்டு எண்ணக்கூடிய செல்வர்கள் சிலரேஇருக்கிறார்கள். அன்றியும், கத்தோலிக்கசமயமே ஏழைகளை மையமாகக் கொண்டதுதான். ஏழைமக்கள்தான் கத்தோலிக்க திருமறையின் மூலவேர்கள். ஏழைகளின் இகபரநலவாழ்வுக்காகவே அன்றும், இன்றும், என்றென்றும் திருச்சபைஅயராதுழைத்துவருகின்றது என்பதைப் பகிரங்கமாக அறிவுறுத்த விரும்புகிறேன். உண்மை இப்படியிருக்கக் கபடமானமுறையில் கத்தோலிக்கமக்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியைத் தலைமைத்தானத்திலிருப்போர் கையாண்டுவருவது மிகவும்அவமானமாகும்.

நிதிமந்திரியார் கூறுவதுபோல எங்கள் பாடசாலைகள் சிறந்தவைதாம். அவை எப்போதும் திறந்துதான்இருக்கின்றன. எல்லோருக்காகவுமே திறக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஏழைமக்களின் குழந்தைகள்தாம் கல்விகற்கிறார்கள். செல்வர்சிலரின் பிள்ளைகளும் அங்குபடிக்கிறார்கள். அப்படியிருக்க அங்கு கல்விகற்காத ஏழைமக்கள் இருப்பதாக நிதிமந்திரி கூறுவதன் அர்த்தமே எனக்கு விளங்கவில்லை.

சரித்திரமறியாக் காலமுதலே ஏழைமக்களுக்காகவே உழைத்துவரும் கத்தோலிக்கதிருச்சபை

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பாப்பரசர்தின.....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

குழுமினர். வண. பிதா ஜஸ்டின் பெரேரா அவர்களும், வண. பிதா அன்றூ பீற்றர் பெர்ணண்டோ அவர்களும், வண. பிதா ஜேக்கப் பெர்ணண்டோ அவர்களும் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் மக்கள் மனதைக் கவரும்வண்ணமாகச் சொற்பொழிவாற்றினர்கள்.

அவர்கள் தம் சொற்பெருக்கில் இன்றைய சூழ்நிலையில் கத்தோலிக்க மக்களைப் பரிசுத்த பாப்பரசரின் ஆளுகையினின்று பிரிக்கும் நோக்கமாகப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவென்றும், கத்தோலிக்க மக்களாகிய நாம் இவ்வித சந்தர்ப்பங்களில் ஒருங்கிய ஐக்கியமாக இருக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

ஈற்றில் பாப்பரசர் கீதத்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுச் செய்திகள்

கென்னடியின் பெயர்சூடிய குழந்தை

திரு. ஜோன் கென்னடி அவர்கள் அமெரிக்கஜனதிபதியாகத் தெரிவுசெய்யப்பெற்ற தினமாகிய சென்ற 8-ந்திகதி செவ்வாய்க்கிழமையன்று கேகாலைஆஸ்பத்திரியில் பிறந்த ஆண்குழந்தையொன்று அதன்தந்தையால் செபஸ்ரியான் பிள்ளை ஜோன் கென்னடியென்று பெயரிடப்பட்டிருக்கிறது. தந்தை கேகாலையிலுள்ள காரியாலயமொன்றிலே ஓர் அரசாங்கஊழியராய் இருந்துவருகின்றார்.

பொதுத்தராதர பத்திரபரீட்சை

1962-ம் ஆண்டிலிருந்து பொதுத் தராதரப்பத்திர பரீட்சை (ஜி. சி. ஈ.)க்குச் சமமாகும் சகலமாணவர்களுக்கும் சமயமும், ஆங்கிலபாஷையும் கட்டாயபாடங்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. சிங்களம் அல்லது தமிழும், தூயகணிதம் அல்லது எண்கணிதமும் ஏனையகட்டாய பாடங்களாயிருக்கும். எல்லாமாகக் கட்டாயபாடங்கள் நான்காக இருந்துவரும். சமயபாடம் பொதுக்கல்வியின் ஒருபகுதியாக அமைந்திருக்கவேண்டுமெனக் காணப்பட்டமையால் அது ஒருகட்டாயபாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பரீட்சைக்கு எடுக்கப்படவேண்டிய அதிகம் குறைந்த தொகையானபாடங்கள் ஐந்தாகவும், அதிகம்கூடியதொகையான பாடங்கள் எட்டாகவும் இருக்கும். விஞ்ஞானமாணவன்ஒருவன் சாதாரணகலை அல்லது நுண்கலைப்பாடம்ஒன்று எடுக்கவேண்டும். சாதாரணகலைமாணவன்ஒருவன் விஞ்ஞானபாடம் அல்லது நுண்கலைப்பாடம்ஒன்றையும், நுண்கலைமாணவன்ஒருவன் சாதாரணகலை அல்லது விஞ்ஞானபாடம் ஒன்றையும் எடுக்கவேண்டும்.

ஆசிரியரும் ஆசிரியபயிற்சிக் கலாசாலையும்

இதுகாலவரை நடந்துவந்ததுபோல் இலலாது அடுத்தவருடமுதல் ஆசிரியபயிற்சிக்கலாசாலைப் பிரவேசப்பரீட்சையில் தகுதியுடையோராய்க் காணப்படுவோருக்கே எஸ். எஸ். சி. பத்திரமுடைய ஆசிரியராக வேலைகொடுக்கவேண்டுமென்றும், ஒருவருடமாவது ஆசிரியர்களாக இருந்தவர்களையே ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் அனுமதிப்பதென்றும் வித்தியாபகுதி தீர்மானித்திருக்கின்றது.

தாதிகள்பயிற்சிக் கலாசாலை

யாழ்ப்பாணத் தாதிகள்பயிற்சிக் கலாசாலையில் வருடந்தோறும் 40 மருத்துவப்பெண்களும், 60தாதிகளும் பயிற்சிபெறக்கூடிய வசதியிருக்கிறது. ஆயினும், இத்தொகையினர்களில் அரைவாசிப்பேர்தானும் பயிற்சிக்கு எடுக்கப்படவில்லை. இதற்குக்காரணம் தாதிகளின் விடுதிக்கட்டிடம் இன்னும் பூர்த்தியடையாமையே. கட்டிடம் தயாரானதும் பயிற்சிக்கான முழுத் தொகையினரும் எடுக்கப்படுவார்கள்.

பெருமழையும் வெள்ளப்பெருக்கும்

யாழ்ப்பாணமாவட்டத்திலே கடந்த இருவாரங்களிலும் பலதினங்களாகத் தொடர்ந்துபெய்தபெருமழையாலே 1,200குடும்பங்கள் தங்கள்வீடுவாசல்களைவிட்டு வெளியேறின; 725வீடுகள் சேதமடைந்தன. சென்றவெள்ளிக்கிழமைபிற்பகல் அரசாங்கஅதிபர்கூட்டிய மகாநாட்டில் இப்புள்ளிவிபரங்கள் வெளிவந்தன. இந்தமகாநாட்டிற்குப் பாராளுமன்ற அங்கத்தவர்களும், காரியாதிகாரிகளும், சமூகசேவை, சுகாதார, உணவுக்கட்டுப்பாட்டுப்பகுதிகளைச்சேர்ந்த அதிகாரிகளும் சமுகமளித்திருந்தார்கள். வடமராட்சி, கிளிநொச்சி, வலிகாமம்மேற்கு, யாழ்ப்பாணப்பிரிவுகளே பெருவெள்ளத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. வீடுவாசல்களைவிட்டு வெளியேறிய சகலருக்கும் இலவசபங்கீட்டரிசி ஒருவாரத்துக்குக் கொடுபடவேண்டுமென்று மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. வெள்ளப்பெருக்கெடுத்த பகுதிகளிலுள்ள சகலகிணறுகளிலும் கிருமிநாசனிமருந்து போடுவதற்கும், எங்கும் டி. டி. ரி. தெளிப்பதற்கும், தொகையாகச் சேதமடைந்துள்ள மதகுகளைப் பழுதுபார்ப்பதற்கும் நடவடிக்கைகள்எடுக்குமாறு சுகாதாரப்பகுதியும், பொதுமராமத்துப்பகுதியும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

இரண்டாவது கல்விமசோதா

கல்வியின் உள்ளடக்கம் என்னவாயிருக்கவேண்டுமென்று ஆலோசிக்குமாறு நியமனஞ்செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள கம்மிஷனின் அறிக்கைவெளிவந்த பின்னரே, சனப்பிரதிநிதிகள் சபையில் இரண்டாவதுகல்விமசோதா சமர்ப்பிக்கப்படுமென்று அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் பாடசாலைகளுக்குப் பொறுப்பாயுள்ள சிரேஷ்டஉதவிக் காரியதரிசியான டக்டர்ஆனந்தகுருகே தெரிவித்திருக்கின்றார்.

பாடசாலைகளின் விடுமுறை

விடுமுறைக்காகப் பாடசாலைகளை மார்கழிமாதம்1-ந்திகதி மூடிவிடும்படியும், திரும்பத் தைமாதம்3-ந்திகதி அவைகளைத் திறக்கும்படியும் உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளின் தலைமையாசிரியர்கள் வித்தியாதிபதியாலே கட்டளையிடப் பட்டிருக்கின்றார்கள். இவ்விதம்செய்வதானது சகலபாடசாலைகளுக்கும் விடுமுறைகளை ஒருமுகப்படுத்துவதாயும், நிர்வாகசகரியங்களை எளிதாக்குவதாயும் இருக்குமென்று அவர்தெரிவித்திருக்கின்றார்.

ஊர்வலங்களும் ஒலிபெருக்கிகளும் தடைசெய்யப்பட்டிருக்கின்றன

ஒலிபெருக்கிகளை உபயோகிப்பதற்கும், ஊர்வலங்களுக்குமான அனுமதிப்பத்திரங்களைச் சென்றவெள்ளிக்கிழமைமுதல் பொதுவாக வழங்கப்படாதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்பேரில் கூட்டங்களிலும், ஏனையபொதுவைபவங்களிலும் ஒலிபெருக்கிகள் உபயோகிப்பதை அனுமதிக்கப்படாதென்றும், அத்துடன் ஊர்வலங்களையும்தடைசெய்யவேண்டுமென்றும் பொலிஸ்இன்பெக்ற்ஜெனறல் சகலபொலிஸாருக்கும் உத்தரவு பிறப்பிக்கலாயினர். பொதுசனஒழுங்கின் நலனைமுன்னிட்டே இத்தத்தீர்மானம் செய்யப்பட்டிருப்பதாகப் பிரதமர்கூறியிருக்கின்றார். ஆனால், ஊர்வலங்கள் இல்லாமலும், ஒலிபெருக்கி உபயோகியாமலும் பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கு எந்தவிதமான தடையுமில்லை. தனிப்பட்டவைபவங்களுக்கும், சமயவைபவங்களுக்குமே இந்தத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

செங்கல் ஒட்டுத்தொழிற்சாலை

வவுனியாவிலே ஓடு,செங்கல் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைக்கான ஆரம்பவேலைகள் இப்போது நடைபெறுகின்றன. சுமார் 2,00,000ரூபா பெறுமதியான புதியயந்திரசாதனம் இதற்குக் கிடைக்கவிருக்கின்றது. ஏறக்குறைய 9,00,000லட்சம்ரூபா செலவில் அமைக்கப்படும் இத்தொழிற்சாலை வருடந்தோறும் சுமார்30கோடிஓடுகளும், 8கோடிசெங்கற்களும் உற்பத்திசெய்யவிருக்கின்றது. இதிலே 300 பேருக்கு வேலைவாய்ப்புக்கிடைக்கும்.

மன்னர் மாதோட்டக்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எடுத்துக் கூறுவேன். நான் சில நாட்களுக்குமுன்னர் பௌத்த காங்கிரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இதுபற்றி அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன். அவர்கள் தந்த பதிலில் இருந்தே அரசாங்கத்தின் திட்டத்தை அவர்கள் எதிர்ப்பதாக அறியமுடிந்தது. திருமதி பண்டாரநாயக்காவுடைய அரசாங்கம், காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவுடைய கொள்கைகளை கைக்கொள்வதாகக்கூறிக் கொள்கிறது. ஆனால், நான் உறுதியாகக் கூறக்கூடிய தென்னவெனில் பண்டாரநாயக்காஅவர்கள் இத்தகைய ஒரு கொள்கையைக் கடைசிவரை எண்ணவில்லை. இதுவிடயத்தில் இன்று இத்திட்டத்துக்குக் காரணமாக இருக்கிறவர்கள் மார்க்சீயவாதிகளே. இவ்வளவு காட்களும் அவர்கள் தம்திட்டங்களை எவ்வகையில் நிறைவேற்றுவதென்று தருணம் பார்த்திருந்து தற்பொழுது மறைமுகமாக சி. ல. சு. க. அரசாங்கத்தார் மூலமாக நிறைவேற்றுகின்றனர். திருமதி பண்டாரநாயக்கா அவர்கள் தற்பொழுது மார்க்சியவாதிகளின் ஆலோசனைப்படியே நடக்கின்றார். ஆகவே, பாடசாலைகளை எடுக்கும் இந்த நடவடிக்கையும் மார்க்சியவாதிகளுடைய திட்டமே. இந்த அரசாங்கம் பொதுத் தேர்தலில் வெற்றிபெற ஆதரவளித்த அதிககத்தோலிக்கர்களுக்கு இந்த நடவடிக்கை பெரும் ஏமாற்றத்தையே கொடுக்கின்றது. ஆகவே, கத்தோலிக்கரான நாம் எமது பிள்ளைகளின் நலனுக்காக இதை எதிர்க்கவேண்டும். மற்றவர்களைப்போன்று கத்தோலிக்கரான நாங்கள் துப்பாக்கிகளுடன் சென்று சண்டையிடத் தேவையில்லை. அப்படியான சண்டையில் இறங்கவேண்டாமென்று உங்களை நான் கேட்கிறேன். ஒற்றுமையுடன் எதிர்ப்புக்காட்டுங்கள் எங்கள் அதிகாரிகள் காட்டும் பாதையில்நடந்து அரசாங்கம் கண்மூடித்தனமாக நிறைவேற்றும் இத்திட்டத்திற்கு உங்கள் பரிபூரண எதிர்ப்பைக் காட்டுங்கள்."

தொடர்ந்து வண. பிதா. பாலசுந்தரம் அவர்கள் பேசினார்கள். அவர் கூறியதாவது: "கத்தோலிக்கருக்கு இந்தநிலைமை பெரிய அபாயகரமான தொன்றாகும். வருங்கால சந்ததியாரான எம்சிறுருக்கு ஏற்படப்போகும் இன்னல்களுக்குப் பெற்றோராகிய நீங்கள் எம்முடன்பூரண ஒத்துழைப்புக்காட்டி அரசாங்கம்மேற்கொண்டிருக்கும் இத்திட்டத்தை எதிர்க்கவேண்டும். உங்களுடைய பிள்ளைகளின் கத்தோலிக்க அறிவைவளர்க்கும் பொறுப்பு உங்களுடைய தாதலின் ஞானமேய்ப்பர்களுக்கு உங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டும்."

பெற்றோரின்சார்பாகத் திருவாளர் அருளப்பு அவர்கள் பேசுகையில்: "இந்நாட்களில் பெற்றோருடைய கடமைகள் அதிகரிக்கின்றன. இதுவரை கத்தோலிக்கர் தங்களுடைய நிலைமைகளைப்பற்றி ஆலோசனை செய்யாதிருந்தனர். விழிப்புடையும்காலம் வந்துவிட்டது. எங்கள் சிறுவர்களுடைய கத்தோலிக்க கல்விக்கெதிராக முனைத்திருக்கும் பாடசாலைப் பிரச்சினையில் அரசாங்கத்திட்டத்துக்கு நாம் எதிர்ப்புக்காட்டவேண்டும். தனிப்பாடசாலைகள் வைத்துநடத்த நாம்தயாராகவேண்டும் என்று" குறிப்பிட்டார்.

ஜா-எல பாராளுமன்றப்பிரதிநிதி திரு. பாரிஸ் பெரேரா பேசுகையில் குறிப்பிட்டதாவது. "அரசாங்கத்தின் இன்றைய குறிக்கோள் சிரிப்பிற்குரிய தொன்றாகும். பாடசாலைகளை அரசாங்கம் எடுத்து நடாத்துவதுதான் தேசியகல்வித்திட்டம் என்று அவர்கள் எண்ணுகின்றனர். உண்மையிலே தேசியகல்வித்திட்டத்துக்கும் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதற்கும் எவ்விதசம்பந்தமுமில்லை."

பின்னர் அங்கு குழுமியிருந்த பெற்றோரால் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"எங்கள் பிள்ளைகள்மீது எமக்கு அன்பு இருக்குமட்டும், தற்போதைய நாஸ்திகம் நாறும் மசோதாவை நாம்எதிர்த்தேதிருவோம்.

மேற்படி எதிர்ப்பில், எம்மதத்தலைவர்கள் என்னசெய்யும்படி கட்டளை இடுகிறார்களோ எவ்விதகஷ்டங்களையும்பாராது, அக்கட்டளைகளை நிறைவேற்றுவோம்."

இறுதியாக அங்கு கூடியிருந்த மாணவர்களால் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக அங்கிகரிக்கப்பட்டது:

"தற்போதைய கல்விமசோதா எங்களை நேரடியாகத் தாக்குகின்றது. தற்போதைய மசோதாவின்படி நாம் நம் மதக்கோட்பாடுகளுக் கிணங்கிய ஒரு சமயக்கல்வியையோ, அல்லது சமயச்சூழ்நிலையையோ பெறமுடியாது. ஆதலால், இவ்வளவு காலமும் தங்களை அர்ப்பணித்து ஊழியம் புரிந்துவந்த கத்தோலிக்க சங்கியாச கன்னியாஸ்திரிகள் ஆசிரியர்களிடமிருந்தே திருச்சபையின் கண்காணிப்பின்கீழ் நாம் கல்வி பெறவிரும்புகிறோம். அதுவின்றி நமக்கு வேறுகல்வி அவசியமில்லை."

நன்றித் துதி

எனதுமகனுக்கு ஏற்புவருத்தம் உண்டுபட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் வைத்தியர்களால் விசேஷசிகிச்சை செய்யப்பெற்றும் ஏற்புவலி நாளுக்குநாள் அதிகரித்துவந்து பிள்ளை இனித்தப்பாது என்ற நிலைபரத்தில் இருந்தபோது நான் இரவுபகல் கண்ணீர்சிந்தியவளாய் ஏங்கிப் பரதவித்திருந்தேன். அவ்வேளை என் அயலார்ஒருவர் மசனட்ஆண்டவருடைய படத்தைத்தந்து அதைப் பிள்ளையின்தலை மாட்டில் வைக்கும்படியும், அவருடைய சஆகையால் பிள்ளை தப்பிப்பிழைப்பானென்று சொல்லியும் வற்புறுத்தினர். எல்லா நம்பிக்கையையும் இழந்தநான் இந்தச் சுத்தவாளரையாவது அண்டிப் பார்ப்போமென்று தீர்மானித்து, பிள்ளை தப்பிப்பிழைத்தால் இப்பெரும் புதுமையைப் பத்திரிகையில் பிரசுரிப்பேனென்று வாக்குப்பண்ணினேன். ஆச்சரியம், வியாகுலக்கண்ணீர் சிந்தியநான் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தேன். பிள்ளை படிப்படியாகச் சுகப்பட்டுச் சிலநாட்களுள் பூரணசௌக்கியம் அடைந்தான். மசனட் ஆண்டவருக்குச் சீக்கிரம் அர்ச்சியசிட்டம் அருளப்படுவதாக.

மேரி அல்பிறெட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செப அப். சபை வெளியீடு

கார்த்திகை மாதம்

பொதுக்கருத்து:— குடும்பங்களில் வேதாகமவாசிப்பு முன்னேற்றம் அடையும்படியாக வேண்டிக்கொள்வது.

வேதபோதகக்கருத்து:— ஜப்பானிய இளைஞர்களுக்காக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
பாதுகாவலன்

1960-ம் ஆண்டு
கார்த்திகைமாதம் 24-ந் திகதி

ஆனைமுன்னே — மணியோசை பின்னே

பொதுத்தேர்தலின் போது பிள்ளைகளுக்குத் தாய்போன்று பிரதமர்சிறிமா கனிவாகப்பேசினர். மக்களுக்கு எத்தனையோ வாக்குறுதிகளை இனிதேஅளித்தார். அவற்றுளெல்லாம் மதஸ்தாபனபாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும் மசோதாவையே முதன்மையும், மகாமுக்கியமுமானதாகத் தெரிவுசெய்தார். ஆனால், இந்தமசோதாஎமதுநாட்டிலே இன்றுபதிபட்டினியால் வாடுகின்ற இலட்சக்கணக்கான மக்களின் வயிற்றை கிரப்பப் போகின்றதா? வேலையின்றித் திண்டாடுகின்றபதினாயிரக்கணக்கானமக்களுக்கு வேலைகொடுக்கப்போகின்றதா? வசிக்கஇல்லிடமின்றித் தவித்து அல்லற்படும் பல்லாயிரக்கான மக்களுக்கு இல்லிடமளிக்கப் போகின்றதா? அத்தியாவசியகதேவைகளை முந்தக்கவனித்துவிட்டன்றோ மற்றுறையகருமங்களில் தலையிடவேண்டியது முறையும், தகுதியுமாகும்.

பதிபட்டினியால் வாடுவாரைப் போன்று— வேலையின்றித் திண்டாடுவாரைப்போன்று — வசிக்கஇல்லிடமின்றித் தவிப்பாரைப்போன்று மதஸ்தாபனபாடசாலைகளின் முகாமைக்காரர்கள் தங்கள்பாடசாலைகளை எடுங்கள், எடுத்துநடத்துங்களென்று எப்போதாவது குரலையிட்டனரா? தங்களால் இனிமேல்அவைகளை நடத்தமுடியாதென்று எப்போதாவது முறையிட்டனரா? அவர்கள் குரலையிடாதிருக்க—முறையிடாதிருக்க, மதஸ்தாபனபாடசாலைகளை அரசாங்கம் கிணையாப்பிரகாரமாய் வலிந்தெடுக்கவேண்டிவந்தகாரணமென்ன? தோட்டப்பாடசாலைகளைப் பொறுப்பேற்கும்படியாகத் திரு. தொண்டமான் முதலானோர் வேண்டுகோளுக்குமேல் வேண்டுகோள் விடுத்தும் அரசினர் இன்னும் அதற்கு இணங்காத காரணமென்ன?

1956-ம்ஆண்டு அரசாங்ககருமமொழியாகச் 'சிங்களம்மட்டும்' சட்டம் அரங்கேற்றப்பட்டபோது, தமிழ்ச்சிறுபான்மையினர் பாதிக்கப்பட்டனர். அவர்களைத்தொடர்ந்து மதச்சிறுபான்மையினர்மீது கைவைக்கப்படுமென்று அப்போது எச்சரிக்கை செய்யப்பட்டது. இந்த எச்சரிக்கை இப்போது சரியாகிவிட்டது. தேசியகல்வித்திட்டமென்ற திரைமறைவிலே ஏதுகிகமுப்போகின்றதுஎன்பதை இப்போதேநாம் ஊகித்தறியக்கூடியநிலைமை ஏற்பட்டிருக்கிறது. தேசியக்கல்வியென்றால் என்ன? இதைப்பற்றிக் கல்விமந்திரி இன்னுமேஎதுவும் சொன்னபாடில்லை. இந்தத் தேசியக்கல்வித்திட்டம் செயற்படுவதுபற்றியவிளக்கங்கள், விபரங்கள்யாதும் கொடுபடாமலே— அவைகளைப்பற்றி யாதொன்றும்அறியாமலே பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும்மசோதாவைச் சனப்பிரதிநிதிகள்சபையும், செனற்சபையும் நிறைவேற்றியிருப்பது பெரிதும் வேடிக்கையாகும்.

இந்தநிலைமையிலே தேசியக்கல்வித்திட்டத்தைத் தயாரித்துவிட்டதாகப் பெருமையடித்துவந்த கல்விமந்திரி எங்குசென்றிருக்கின்றார்? பிரித்தானி, பிரான்ஸ், நெதர்லாந்து, இத்தாலி, பாகிஸ்தான் முதலாம் நாடுகளிலே தேசியக்கல்வித்திட்டங்கள் என்னமுறையில் இயங்குகின்றனஎன்பதை நேரில் சென்று அறிந்துவருவதற்காக அந்நாடுகளுக்குப் பறந்துசென்றிருக்கின்றார். இதிலிருந்து அவருடையதேசியக்கல்வித்திட்டம் எந்தமட்டிலே நிற்கின்றதென்பது கண்கூடாகிறது. அவ்வாறாக, பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கும் மசோதாவை அத்தனை அவசரம்அவசரமாக அவர் நிறைவேற்றிவைக்கவேண்டிய அவசியந்தான்என்னே! ஆனைமுன்னே, மணியோசைபின்னேயா? வண்டிமுன்னே, குதிரைபின்னேயா? கல்விமந்திரியின் விபரீதச்செயல் இருந்தபடிதான்என்னே! இதிலுள்ள கிருத்திரமம் அப்படியென்ன ஒருநாளாவது அம்பலத்துக்கு வராமல் இருக்கப்போகின்றதா?

அரசாங்கத்தின் தேசியக்கல்வித்திட்டத்தால்வரக்கூடிய பலாபலன்களை அதிகம்நன்றாகஅறிந்தவர்கள் கத்தோலிக்க சமயத்தலைவர்களும், கம்யூனிஸ்ததலைவர்களுமே. மதஸ்தாபனபாடசாலைகள் அரசாங்கபாடசாலைகள்ஆகுமிடத்து அவற்றிலே சமயமென்பதும், சமயஅறிவென்பதும்,சமயசூழ்நிலையென்பதும், சமயானுசாரமென்பதும் படிப்படியாக அழிந்தொழிந்துபோகுமென்பதை அனுபவத்திற்கண்ட கத்தோலிக்க சமயதலைவர்கள் மதஸ்தாபனபாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதைத் தங்கள் பலமெல்லாம்கொண்டமட்டும் எதிர்க்கின்றார்கள். ஆனால், "மதம்என்பது மக்களுக்குஅபின்" என்று விளக்கங்கூறும் கம்யூனிஸ்ததலைவர்கள் மதஸ்தாபனபாடசாலைகள் அரசாங்கபாடசாலைகள்ஆகுமிடத்து மதம்என்பது மதங்குன்றி மறைந்து எங்கும்நாஸ்திகமயமாகுமென்பதை அனுபவத்திற்கண்டு இன்றுகுதூகலிக்கின்றார்கள். மதஸ்தாபனபாடசாலைகளை அரசாங்கம் வலிந்துஎடுக்கும்திட்டம்; மதங்களை அழிப்பதற்குச் செய்யப்படும் ஒருசதித்திட்டம். அதில் இதுஒருகட்டம். பிரதமர் சிறிமா இதனை உணர்ந்துசெய்தாலென்ன, உணராதுசெய்தாலென்ன, அவர் இதையிட்டுக் கண்ணீர்சிந்திக்கலங்கவேண்டியகாலம் ஒருநாள் வரவும்கூடும் என்க.

அடுத்தபடியாக

ஒலிபெருக்கிகளின் உபயோகத்திற்கும், ஊர்வலங்களுக்கும் தடைவிதித்துப் பிரதமர்சிறிமா ஓர்உத்தரவு பிறப்பித்திருக்கின்றார். இந்தஉத்தரவைப் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரல் சிரமேற்கொண்டு நிறைவேற்றிவைக்க முன்வந்திருக்கின்றார். இதற்கானகாரணத்தைத் திரு. டபிள்யு. தஹநாயக்கா எவர்க்குமேஅஞ்சாது வெளிப்படையாக எடுத்துக்கூறியிருக்கின்றார். அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதைக்கண்டித்துத் தான்நடத்திவரும்கூட்டங்களிலே ஒலிபெருக்கிகளை உபயோகிப்பதற்குத் தனக்குஅனுமதியளிக்க அரசாங்கம் மறுக்கிறதென அவர்முறையீடுசெய்திருக்கின்றார். "அரசாங்கத்திலே குற்றம்பிடித்து அதற்குச்சங்கடம்விளைப்பதான பொதுசனஅபிப்பிராயத்தை வெளியிடுவதைத் தடுக்கும் வெளிப்படையான ஒருபிரயத்தனம் இதுவாகும்; எனதுகூட்டங்களைப்பற்றி அரசாங்கம் உள்ளபடியே பீதியடைந்திருக்கிறது; ஏனெனில், எல்லோருமே அறிந்துள்ளபடி, அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதைச் சண்டவேகத்துடன் எதிர்த்துநடத்தும் எனதுபோராட்டத்திலே நான்சொற்பொழிவாற்றும் கூட்டங்களில் பலமுறைகளிலுமே பதினாயிரமுதல் இருபதினாயிரம்மக்கள்வரை சமுகமளிக்கின்றார்கள்" என அவர் தெரிவித்திருக்கின்றார். ஒலிபெருக்கிகளுக்கும், ஊர்வலங்களுக்கும் தடைசெய்வது ஜனநாயகஉரிமைகளுக்கு முரண்பட்ட — கண்டிக்கத்தக்க ஒருசெயலாகும். ஆயினும், இதனைச்சிந்தனைசெய்யாதஅரசாங்கம் அடுத்தபடியாகப் பத்திரிகைச்சுதந்திரத்திலே கைவைக்கும். அடுத்தபடியாகப் பேச்சுச்சுதந்திரம், கண்டிக்கும்சுதந்திரம் ஆதியவற்றில்தான் கைவைக்கவேண்டிவரும். அப்போது, ஜனநாயகம்என்பது ஒருபெரும் கேலிக்கூத்தாகமுடிய, கம்யூனிஸ்தநாடுகளில்போன்று சர்வாதிக்கம் நடைபெறவேண்டியதுதான்.

சகலருக்கும் ஒரேசட்டம்

பலசாகியத்தவரும், பலசமயத்தினரும் வாழுகின்ற இந்தநாட்டிலே ரோமான்கத்தோலிக்கருக்குமாத்திரம் விசேஷசட்டங்களோ அன்றேல் விசேஷசலுகைகளோ இருக்கமுடியாது; சாகியபேதம், கொள்கைபேதம், சமயபேதமில்லாது சகலருக்கும் ஒரேசட்டம் இருக்கவேண்டுமென்று ஆரணங்கு பிரதமர் சிறிமா அறைகின்றார். ஆனால்,

உலகப் பொதுமக்களின் பொதுத் தந்தை

பொதுமக்களின் தந்தை யென்றபுகழ் நாமம் பெற்றிலங்கும் பரிசுத்ததந்தை **23-வது அருளப்பாப்பரசர்** அவர்களின் எண்பதாவது ஜனனவிழாவை இம்மாதம் 25-ம்திகதி திருச்சபை ஆடம்பரத்துடன் கொண்டாடுகின்றது. பேதுருவின் ஸ்தானத்திலே கிறிஸ்துநாதரின் இடமாகத் திருச்சபையைப் பரிபாலிக்கும் ஒப்பற்ற தலைவரை உலகின் பல்வேறுபாகங்களிலும் வசிக்கும் 47கோடிகத்தோலிக்கமக்களுடன், பிறமக்களும் இத்தினத்தில் அஞ்சலிசெய்வார்கள். அவரின் வெண்பொன்வர்ணம் தாங்கும் கொடியை ஏற்றிப் பட்டொளி வீசும் அக்கொடியின்புனித நிழலில் உலகமக்கள் அனைவரும் ஒன்றுசேருக்கமாகப் பிரார்த்திப்பார்கள்.

பரிசுத்த தந்தைஅவர்கள் தமது ஆட்சியின் ஆரம்பத்திலிருந்தே அன்பால் அனைவரையும், தம்பால்கவர்ந்துகொண்டார். **பொதுமக்களின் வாழ்க்கையில் அக்கறைஉடையவராகக் காணப்படுகின்றார்.** வத்திக்கான் மாளிகையின் சேதட்டத்திலேஉலாவுவதற்கு ஓர்நாள் பரிசுத்ததந்தை சென்றுகொண்டிருந்தார். அவர் சென்ற திசையைநோக்கி ஓர் மோட்டார் இரதம் வந்துகொண்டிருந்தது. முந்தியிரவு மழைபெய்திருந்தமையால் வாகனத்தின் சில்லுகள் பாதையிற் தேங்கிநின்ற தண்ணீரை அவாது வெண்மையான அங்கியில் அடித்து அதன் கீழ்ப்பாகத்தைக் கறைப்படுத்தியது. தாம் அதைப் பொருட்படுத்தவில்லையெனச் சயிக்கினை காட்டிச்சென்றார் பாப்பரசர்.

(தொடர்ச்சி 7-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகோணங்களில் பரிசுத்ததந்தை

அண்மையில் அமெரிக்க அதிபர் ஐசன்கோவர் தமது ஐரோப்பியச் சுற்றுப்பிரயாணத்தின்போது அருளப்ப பாப்பரசரின் பிரத்தியேக பேட்டிகிடைக்கப் பெற்றார். இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது பாப்பரசர்தமாஷாகக்கூறினார்: ஜெனரல், நீங்கள் ஒருகாலத்தில் இராணுவத்திலிருந்தீர்கள். இன்று அமெரிக்க அதிபராகியுள்ளீர்கள். நாமும் ஒருகாலத்தில் இராணுவத்தில் கடமையாற்றினோம். இன்று வத்திக்கானின் அதிபதியாகவிருக்கிறோம். எங்களிருவருக்குமிடையில் எவ்வளவு ஒற்றுமை பார்த்தீர்களா?

•

இத்தாலிய மேற்றிராணிமார்பலர் பாப்பரசரைச் சந்திக்க ஒன்றுகூடியிருந்தனர். ஒவ்வொருவராகப் பரிசுத்த தந்தையின்முன் முழந்தாளிட்டு ஆசாரத்துடன் கணையாழியை முத்தமிட்டனர். அவர்களுள் இத்தாலிய இராணுவத்தில் கடமையாற்றும் குருமாரின் பிரதம மேற்பார்வையாளரான மேற்றிராணியார் பின்ரோனியோ அவர்களும் தம் இராணுவ உடைகளுடன் காணப்பட்டார். ஆண்டவராவர்கள் தமது முறைவந்தமும் முழந்தாட்படியிடு முன்னம், எழுந்துநின்ற அருளப்ப பாப்பரசர், இராணுவமுறைப்படி சலாம்செய்தபடியே, ஐயா, சார்ஜ்ஜண்ட் றொங்கோலி வணக்கம் தெரிவிக்கிறேன் என்றார்.

•

ஒருநாள் மாலைவேளை. பாப்பரசர் வத்திக்கானின் மாளிகைகளைச்சுற்றித் தம் கைப்பிரம்புடன் உலாவிக் கொண்டிருந்தார். தமது மோட்டார் ரதங்களைப் பழுதுபார்க்கும் பகுதிக்கு அருளப்ப ஆண்டகை வந்த சமயம் மோட்டார் ரதத்தின் பகுதிகளைச் சுத்தம் செய்யும் யந்திரமொன்று இயங்குவதை உற்றுக்கவனித்துக்கொண்டிருக்கும் சிறுவனொருவனைக் கண்டார். சிறுவர்களை அன்புடன் நேசிக்கும் பாப்பரசர் அவனிடம்சென்று பரிவுடன்நோக்கி, தம்பி உன் பெயர்என்ன என வினவினார். பையனே, தன்னை வினவுபவர் இன்னாரென்பதையறியாதவனாய் அலட்சியமாக, என் பெயர் கருதினால் எனக் கூறிவிட்டு இயந்திரம்இயங்குவதையே கவனித்துக்கொண்டிருந்தான். பாப்பரசரோ புன்னகையுடன் ஆ! மறந்துவிட்டோம். சில தினங்கட்குமுன்னர் நாம் நியமித்த கருதினல்மார்கட்குள் நீயும் ஒருவராயிருத்தல்வேண்டும் எனக் கூறிவிட்டு அப்பால் சென்றார்.

•

பாப்பரசரைச் சந்திக்க அவர் பிறந்த இடமான **சொத்தோ இல் மொந்தே** கிராமத்திலிருந்து பலர் வந்திருந்தனர். இவர்களுள் பாப்பரசருடன் இளவயதில் கூட்டுக்கொண்டவர்களும், விளையாடியவர்களுமான பலர் காணப்பட்டனர். அவர்களைப் பார்த்து, பாப்பரசர் எக்களத்துடன் கூறினார்: "உங்களுடன் வந்து வத்திக்கானின் பல பகுதிகளையும், ரோமைநகரின் அழகிய ஆலயங்களையும், காட்சிகளையும் காண்பிக்க நாம் மிகவும் ஆவலுடனிருக்கிறோம். ஆயின், எம்மை வழிநடத்துவதற்குப் பலபேர் உண்டு. நாம் ஒரு இடத்துக்குச் செல்வதையும், அங்கு நாம் செய்யவேண்டியவைகளையும் திட்டமிடுவதற்குப் பல அதிகாரிகள்உண்டு. அவர்களின் திட்டங்களை நாம் அலட்சியம் செய்யமுடியாது" என்றார்.

•

ஒருநாள் நள்ளிரவு. பாப்பரசர் படுக்கையில் நித்திரையின்மையால் புரண்டுகொண்டிருந்தார். அவரது விழிகளிரண்டும் உறக்கமின்றித்தவித்தன. அவரது நெஞ்சை ஏராளமான எண்ணங்கள் அலைக்கழித்தன. இரும்புத்திரையின் பின்னால் கத்தோலிக்க திருச்சபை அனுபவித்துவரும் இன்னல்களையும், புதுவேத நாடுகளில் திருச்சபையைக் கட்டியெழுப்புவதில் இடையூறுகளிளங்கும் பல்வேறு எதிர்ப்புகளையும், உலகின் பலபாகங்களிலும் எழுப்பப்படும் கண்டனலோகாதயக்கொள்கைகளையும், இவற்றினெதிரே சத்தியத்தை நிலைநிறுத்தத் திருச்சபை எடுத்துவரும் பகீரதப் பிரயத்தனங்களையும், உலக சமாதானத்தை நிர்மூலமாக்கப் பலதேசங்கள் எடுத்துவரும் நடபடிகளையும் பற்றிய எண்ணங்கள் அவர்மனதிலெழுந்து வெகுவாய் வருத்தின. சாத்தானின் சோதனை மிக அதிகமாயிருந்தது. செய்வதறியாது திகைத்தார், கலங்கினார், சிந்தித்தார். ஈற்றில் நல்லது, காலையில் பாப்பானவரிடம் இவற்றைச் சொல்லி ஆறுதல் பெறுவேன் என மனதில் சொல்லிக் கொண்டார். அவர் மனம் சிறிது ஆறுதல்பெற்றது. மகிழ்ச்சியுடன் எழுந்தார். உடனே தமது தீர்மானத்தையெண்ணி வாய்விட்டுச் சிரித்தார். அவர் தான் பாப்புஅல்லவா? சோதனைகளின்போது செய்வதே தென்பதை அவர் அறிவார். முழந்தாளிட்டு ஒருமணித்தியாலத்துக்கு மேலாக இறைவனை உருக்கமுடன் வேண்டினார். தனது இன்னல்களை மரியன்னையிடம் தெரிவித்து ஆறுதல் கோரினார். அமைதியாக மகிழ்வுடன் படுக்கைக்குச் சென்றார். நிறைந்த மனதுடன் நித்திரைசெய்தார்.

(வளரும்)

இந்தநாட்டிலே ஒரோர்குறித்த சாகியத்தினருக்கும், சமூகத்தினருக்கும், சமயத்தினருக்கும் ஏற்கனவே விசேஷசட்டங்கள் சிலவிருப்பதைப் பிரதமர்சிறிமா அறியார்போலும். தேசவழமைச்சட்டமும், கண்டியர்களின் விவாக— விவாகரத்துச் சட்டமும், ஏனையசமயத்தினருக்கு இல்லாதவிதமாக இலங்கையிலுள்ள சிறுபான்மையினரான முஸ்லீம்களுக்கு விவாகவிஷயமாய் அருளப்பட்டுள்ள விசேஷசலுகையும், சமயசட்டமும் இருந்துவருவதைப் பிரதமர்அறியாததினாற்போலும் சகலருக்கும் ஒரேசட்டமென்று சட்டம்வகுக்கின்றார். இலங்கையிலே தண்டனைவிதிக்கும் கட்டளைச்சட்டத்தின்படி, ஒருவர் தனதுமனைவி உயிரோடிருக்கும்போது மற்றொருத்தியை வதுவைசெய்வது ஏழு வருடசிறைத்தண்டனை விதிப்பதற்கான பாரியதோர் குற்றமாகும். ஆனால், நான்குமனைவியரைக் கொண்டிருந்தாலும் முஸ்லீம்ஒருவருக்கு அதுகுற்றமாகமாட்டாது. ஏனெனில், முஸ்லீம்களுக்குமாத்திரம் இதற்குச் சட்டம்அனுமதிக்கிறது. காரணம், அவர்களின்சமயம் அவ்வாறு செய்ய அனுமதிப்பதேயாகும். ஆனால், பாடசாலைகள்சம்பந்தமாய்த் தங்களுக்கு விசேஷசலுகை வழங்கப்படவேண்டுமென்று கத்தோலிக்கமக்கள் வேண்டுவது அவற்றிலும் மகாமுக்கியமானதாகும். அவர்களுடையவிஷயமாய் அவர்களுக்கு வழங்கப்படுவது ஒருசலுகையல்ல. ஆனால், கத்தோலிக்கசூழலிலே, கத்தோலிக்க சுற்றாடலிலே தங்கள்பிள்ளைகளைப் படிப்பிக்கவேண்டுமென்பது அவர்களுடையசமயத்தால் அவர்கள்மேல் சுமத்தப்பட்டுள்ள பாரதூரமான ஒருகடமையாகும். இதன்சரியான அர்த்தம் என்னவென்று தன்னால்விளங்கிக்கொள்ளமுடியவில்லையேயென்று பிரதமர்கூறுகின்றார். ஆயின், ஒருபாடசாலையில் ஒருபிள்ளை சமயபாடம் படிப்பதற்கும், சமயசூழலிலே ஒருபிள்ளை சமயபாடம் படிப்பதற்கும் எத்துணைபெரும் வித்தியாசம் உண்டென்பதை அவரால் விளங்கிக்கொள்ளமுடியாதிருக்குமா? பிரிவினைப்பாடசாலைகளுக்குச் சலுகையளித்துள்ளஅரசாங்கம் மனங்கொண்டால் கத்தோலிக்கபாடசாலைகளுக்கும் அதேசலுகையைஅளிப்பது அநீதியின்பாற்பட்ட செயலாகுமா? சகலருக்கும் சமசட்டம் என்றுசாற்றுகின்ற பிரதமர்சிறிமாவின் சட்டத்தின்போக்கு இதுதானா!

பாப்பரசர்தினக் கொண்டாட்டங்கள்

● சிலாபத்தில்

பரிசுத்த பாப்பரசர் 23-ம் அருளப்பர்தினத்தைக் கொண்டாடும் முகமாக சிலாபமீசாமிலே கார்த்திகைமாதம் 6-ந் திகதி மாபெரும் கூட்டம் கூடப்பட்டது.

திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் சிலாப மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் பரிசுத்த பாப்பரசர் கொடியை ஏற்றிவைத்தார்கள். அதன்பின்னர் அவர் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் சொற்பெருக்காற்றினர்.

அவர்தம் சொற்பெருக்கின்போது எவ்விதம் முதற்பாப்பரசரான அர்ச். பேதுருவானவருக்குக் கொடுத்த அதிகாரம் அவரைத்தொடர்ந்து வந்தவர்களுக்கு வந்ததென்றும், கத்தோலிக்க மக்கள் பாப்பரசர்மட்டில் எவ்வளவு பிரமாணிக்கமுள்ளவர்கள் என்றும் எடுத்தியம்பினர்.

கத்தோலிக்கமக்கள் வீடுகளிலேயும், அவர்கள் வாகனங்களிலேயும் பாப்பரசர் கொடிகள் அண்மையதினம் பறந்தன. பாப்பரசரின் நோக்கங்கள் நிறைவேறுவதற்காகவும் அவர்கள் மன்றாடினார்கள்.

● மாருவிலில்

பரிசுத்த தந்தையாம் பாப்பரசரின் தினம் பரிசுத்த கன்னிமரியம்மாள் தேவாலயத்தில்கொண்டாடப்பட்டது. அத்தினத்திலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கே குழுமியிருந்தார்கள்.

காலையிலே திவ்வியபூசைப்பலி அன்னருக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலையில் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின்னர் வெள்ளைநிற அங்கிகளை அணிந்த சிறுவர் சிறுமியர் பாப்பரசரின் கொடிகளை ஏந்தியவண்ணம் இருமருங்கும் அலங்கரிக்கப்பட்ட பாதைவழியால்வந்து மைதானத்திலே குழுமினர். அவ்வமயம் வண. குயின்டஸ் சுவாமி அவர்கள் பரிசுத்த பாப்பரசரின் படத்தைத் திறந்துவைக்கவே, வண. அல்பிறெட் லோபோ சுவாமி அவர்கள் பாப்பரசரின்கொடியை ஏற்றிவைத்தார்கள்.

வண. குயின்டஸ்சுவாமி அவர்களும் வண. ஜே. பி. அன்றுடி சுவாமி அவர்களும் சொற்பெருக்காற்றினர்கள். அதன்பின்னர் இலங்கைத் தேயிலைப் பிரசாரச்சபையோரால் அங்கு குழுமியிருந்தோருக்குத் தேனீர் விருந்தளிக்கப்பட்டது. ஈற்றில் ஜப்பானிய்ஸ்தானீகர் காரியாலயத்தாரால் ஓர் அருமையான படக்காட்சியும் காட்டப்பட்டது.

● கொட்டாஞ்சேனையில்

பரிசுத்த பாப்பரசருக்குத் தங்கள் பிரமாணிக்கத்தைத் தெரிவிக்கும் பொருட்டுக் கொட்டாஞ்சேனைக் கத்தோலிக்கமக்கள் ஆசனக்கோவிலிலே

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

சுகித்த பாப்பரசே வாழி!

இராகம்: சங்காபரணம்] ["சுப ஜெய மங்களமே" எ. மெட்டு

பல்லவி

வாழிய வாழியவே — நீடு
வாழிய வாழியவே.
சுதன் யேசுவின் கற் பிரதிநிதியாம்
சுகித்த பாப்பரசே.

சரணம்

1. மக்கள் மனம் மகிழ — மன்னன்
மகுடம் புனைந்தனரே
திக்குத் திசையாய்ச் சிதறிய மந்தையைச்
சேர்க்க முனைந்தனரே. (வாழிய)

2. தாழ்மையில் யேசுவையே — தாமும்
வாழ்வினில் கொண்டனரே
ஏழ்மை விருப்பும் எளியோர் கலமும்
என்றும் கொண்டனரே. (வாழிய)

3. புயலுடன் அலைமோதிப் — பெரும்
பூகம்பம் விளைந்தாலும்
போதகன் பேதுரு பாறையை அசைக்கப்
புவிதனில் அரிதாமே. (வாழிய)

4. மேய்ப்பனில்லா மந்தை — மண்ணில்
மேன்மை அடைவதுண்டோ?
மேய்ப்பன் பாப்புவின் தலைமையிலின்றேல்
மீட்பும் எமக்குண்டோ. (வாழிய)

5. வேதத்தின் சாட்சிகளாய் — முன்னோர்
காட்டிய வீரமதை
சோதனையான இக்காலந்தனிலே
சாதிக்க முன்வருவோம். (வாழிய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே!

"பொன்னை உலையிலிட்டு எப்படித் தூய்மையாக்குகிறார்களோ அப்படியே தேவனும் தாம் அதிகம்நேசிக்கும் மக்களையும் உபத்திரவங்களினால் தூய்மையாக்குகிறார்" என்று பாவுலுஅப்போஸ்தலர் கூறுகின்றார்.

பல புனிதர்களின் சரித்திரங்களை வாசித்துக்கொண்டுபோனால் மலிந்து கிடக்கும் சொற்களும், கதைகளும் என்ன? உபத்திரவங்கள், கஷ்டங்கள், வருத்தங்கள் முதலியனவே. இப்படிப்பட்ட காரியங்களைக்கொண்டு தேவன் அவர்களைத் தூய்மையாக்கினார். உபத்திரவங்களிலே நாம் உறுதிப்படுவோம். தேவனின்வரங்களை நாடிநடப்போம்; இதனால், தேவனும்நமக்கு வேண்டிய சகலத்தையும்தந்து நம்மை உறுதிப்படுத்துவார்.

இன்னும், நமது ஆண்டவரும், இரட்சகருமான யேசுபெருமான் கூறிய ஓர் உவமையில் எப்படி மீன்களைப் பிடிப்பவர்கள் கடலிலே வலைகளைவீசி இழுத்துக் கரைக்குக் கொண்டுவந்து கரையிலேவைத்து அவற்றுள் நல்ல மீன்களை எடுத்துக்கொண்டு மற்றவற்றை எறிந்துவிடுவதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

இப்படியே தேவனும் உபத்திரவங்கள்மூலம் நல்லவர்களையும், கெட்டவர்களையும் பிரிக்கிறார்.

நமக்குவந்துள்ள இப்பெரிய உபத்திரவங்களைக் கொண்டே நம்மைத் தூய்மையாக்கி, நித்தியசீவியத்துக்குரிய திரவியங்களைத்தேட அரியபெரிய சந்தர்ப்பங்களை நமக்கு அளித்துள்ளார்.

இன்னும் உபத்திரவங்களில்தான் கிறிஸ்துநாதருடைய பிரமாணிக்கமுள்ள சீடர்கள் யார்என்பது தெரியும். இதனால் இந்த அவலநிலையில் நாங்கள் கிறிஸ்துவிடம் எங்கள் சகலகிரிகையிலும் ஒன்றித்திருப்போமாக.

ஞானப்பிதா

பாப்பானவர்பேரில் பாமாலை

("வெண்ணிலா ஜோதியை வீசுதே" என்ற மெட்டு)

பல்லவி

பரம்பொருள் சோதியை வீசுதே
பாரிலெம் மாமறை ஓங்குதே
தந்தைபாப் பானவர் கிழலிலே

சரணம்

நாஸ்திகப் பேய்களும் நடுநடுங்கவே
நாசவி னைகளும் நலிந்தொழிபவே
நாடுநா டாகவே நன்மைகள்ஓங்கவே
நல்லசெங் கோலினை ஓச்சியே.

●

நிலதளம் பாவரம் பெற்றுமண்ணிலே
நிலையுறும் ஒருகுடை ஆட்சிதன்னையே
நானிலம் யாவிலும் நாட்டிடும்வீரரை
நல்லபா மாலைகொண் டேற்றியே.

●

பரமனின் பிரதிநிதி ஆகளன்றுமே
பாரினைக் காத்திடும் பணிகளாற்றியே
கத்தனின் மாமறை நித்தமும்ஓதியே
கதிதனைக் காட்டிடும் மேய்ப்பரே

●

பதிதரெம் உரிமைகள் பறித்தபோதிலும்
பயங்கர ஆட்சிகொண் டெதிர்த்தபோதிலும்
சத்தியம் ஓங்கவே நித்தியம்வீரராய்
சந்தபாப் போடுசேர்ந் துய்யவே.

●

நீடிய ஆயுளும் நிறைந்தசேவையும்
கூடிய சாந்தமும் தூய்மைஉள்ளமும்
நாடிய நன்மைகள் யாவையும் பெற்றுமே
நலமுடன் பாப்புவும் வாழ்கவே.

24,132 தாய்மார்கள் பிரதமமந்திரி அவர்களுக்கு அனுப்பிய மகஜர்

வெறுப்பும் கசப்பும் நீடிக்கிறது

5,000 தாய்மாருக்குப் பிரதம மந்திரியவர்கள் பேட்டியளிக்கத் தவறியதைத் தொடர்ந்து இலங்கையில்வாழும் பல்வேறு சாதி சமயங்களைச் சேர்ந்த 24,132தாய்மார்கையொப்பமிட்டுப் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதை எதிர்த்து ஒரு மகஜரைப் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ளனர்.

இம்மகஜரை சமர்ப்பிக்குமுகமாகப் பிரதமரைப் பேட்டிகாண்பதற்காக விடுக்கப்பட்ட தொடர்பான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டன. எல்லா முயற்சிகளும் கைகூடாதுபோகவே, கடந்தவாரம் மகஜர் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது.

ஏமாற்றமும், வெறுப்பும், துக்கமும் இந்நாட்டின் தாய்மாரிடம் இருப்பதாகவும், அவை அதிகரித்துக்கொண்டு வருவதாகவும் தெரிகிறது.

இக்கட்டான இந்நிலையில் பிரதமர் தங்களுக்கு ஆறுதல் தருவாரென்றும், தங்கள் கோரிக்கைகளுக்குச் செவிசாய்ப்பாரென்றும் தாய்மார்கள் காத்திருந்தனர். ஆனால், அவரது செயல் தங்களுக்கும், பிரதமருக்குமிடையில் இருந்த நெருங்கிய தொடர்புக்கு ஒரு தடையை ஏற்படுத்திவிட்டதென்று வருந்துகிறார்கள்.

தாய்மார் பிரதமருக்கு அனுப்பிய மகஜர் வருமாறு:

'வருங்காலத்தில் இலங்கையின் பிரஜைகளாகத் திகழவிருக்கும் குழந்தைகளின் தாய்மாராகிய நாங்கள் எங்கள் பிரதமரும், எங்களைப்போன்ற ஒரு தாயுமான கௌரவ சிறிமாவோ பண்டாரநாயகா அவர்களுக்கு விண்ணப்பிப்பதென்னவெனில், நாங்கள் விரும்பும் பாடசாலைகளில் எங்கள் பிள்ளைகளைப் பயிற்றும் அடிப்படையான உரிமையையும், சுதந்தரத்தையும் எங்களுக்கு அளிக்கும்படி கோருகிறோம். தாங்களும், தங்கள் புகழ்பெற்ற கணவரும் அனுபவித்த இவ் உரிமையையே நாங்களும் கோருகிறோம்

அரசாங்கத்தின் தலைவரென்ற முறையில் உங்களுடைய செல்வாக்கைப் பிரயோகித்து, இக்கட்டான இந்நிலையில் மனங்கலங்கியிருக்கும் எமக்கு, உங்களையும் உங்கள் கணவரையும் போன்ற பிரபலஸ்தரையும், மேதாவிகளையும் உருவாக்கிய மதஸ்தாபன பாடசாலைகளைப் பாதுகாக்கும்படி பணிவாகவும், கண்ணியமாகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நாம் தாழ்மையாய் வற்புறுத்திக் கேட்பதேதெனில், கௌரவ பிரதம மந்திரியாகிய தாங்களும், தங்கள் குடும்பத்தினரும் அனுபவித்த — மதஸ்தாபன பாடசாலைகளில் கல்விபெறும் உரிமைகள் எங்கள் பிள்ளைகளுக்கு மறுக்கப்படுமுன், நாட்டின் தலைவரென்ற மட்டில் மாத்திரமல்ல, இலங்கையிலுள்ள பல்லாயிரக் கணக்கான தாய்மாரும் பிள்ளைகளும் நம்பிக்கையுடன் எதிர்நோக்கும் அருமையான தாயார் என்றமட்டிலும் எங்கள் விண்ணப்பங்களுக்குச் செவிமடுத்து, தங்கள் அதிகாரத்தைக்கொண்டு எங்கள் பாடசாலைகள் அரசாங்கத்தால் எடுத்தப்படுவதைத் தடுத்துவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.'

30,000 கத்தோலிக்கர்.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துடனும் கடவுளை வேண்டிக் கொள்ளும்படி இச்சுற்றுப்பிரகாரம் ஒழுங்கு செய்யப்பட்டது. சிலுவைப்பாதையின் 14ஸ்தலங்களும் சுற்றுப்பிரகாரப்பாதையின் பல்வேறு இடங்களில் அனுஷ்டிக்கப்பட்டன. அப்போது வண. யோசெவ் ஜயசூரியா சுவாமி அவர்களால் சுருக்கமான, அருட்சிக்குரிய பிரசங்கங்கள் செய்யப்பட்டன.

இந்தச் சுற்றுப்பிரகாரத்தில் கலந்துகொண்ட ஏழுவிசாரணைப் பங்குகளைச்சேர்ந்த கட்டளைக்குருமாரும் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து சென்றனர். வத்தளை, சந்தாளுள் தேவாலயத்திலிருந்து மாலை 2-30மணிக்கு ஆரம்பமாகிய இச்சுற்றுப்பிரகாரம், ஒவ்வொரு சிலுவைப்பாதைஸ்தலத்திலும் சிலநிமிடங்கள் தரித்துச்சென்று இறுதியில் 6-30 மணிக்கு மத்துமாகல்ல திருஇருதயநாதர் கோவிலை அடைந்தது. வண. நீக்கலஸ் பெரேரா சுவாமியவர்களால் திவ்வியபூசை நிறைவேற்றப்பட்டு, திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டதும் மக்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர். சுற்றுப்பிரகாரம் தொடக்கமுதல் முடிவுவரை வெகுஅமைதியாக நடைபெற்றது.

23-ம் அருளப்ப.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் 20-ம்நூற்றாண்டிலும் பயனளிக்கக் கூடியவை என்பதை நிரூபிக்கும்பொருட்டு, பலநூற்றாண்டுகளின்பின் முதல்முறையாக இவ்வருட ஆரம்பத்தில் ரோமாபுரியில் ஓர் மேற்றிராசனச் சங்கத்தைக் கூட்டித் தற்கால தேவைகளுக்கேற்ற புது ஒழுங்குகளை விதித்துள்ளார். திருச்சபையை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்வதற்குப் பொதுச் சங்கம் ஒன்றை 1962-ம்ஆண்டில் கூட்டுவதற்கு அவசியமான சகலஆயத்தங்களையும் வெகுதுரிதமாகச் செய்துவருகின்றார். இன்னும் திருச்சபையின் ஒற்றுமையை விட்டுப்பிரிந்து நிற்கும் பெருந்தொகையான கிறிஸ்தவ சகோதரர்களைத் தாயாம் திருச்சபையுடன் ஒற்றுமைப்படுத்தப் பலமுயற்சிகளைச் செய்யாண்டுவருகிறார்.

பரிசுத்த தந்தை வயதளவில் முதிர்ந்தவராய்த் தோன்றினாலும் நோயென்பதை அறியாதவராய்ப் பூரண சுகதேகியாயிருந்து வருகின்றார். உள்ளத்திலும் இளமைகுன்றாதவராகவே காணப்படுகின்றார். உலகமக்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ள நம் அன்புத் தந்தையை இறைவன் இன்னும் பல்லாண்டு பாதுகாத்து, திருச்சபையின் முன்னேற்றத்திற்கு இன்னும் பலமகத்தான கருமங்களைக் கையாளுவதற்கு ஞான ஒளியையும், ஆன்மசரீர உறுதியையும் அருளுவாராக!

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 26-ந்தேதி சனிக்கிழமை பி.ப. 4மணிக்குச் சஞ்சூசை யப்பர் ஆலயத்தில் ஆரம்பமாகி நடைபெறும். சகோதரர் எல்லோரும் நேரகாலத்தோடு சமூகங்கொடுக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

A. S. Francis of Mary.
சபைக் கர்த்தருக்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி எஸ். செபமாலைமரியை செல்வராணியின்

5-ம் வருட மரணஞாபகம்

பிறப்பு: 3-5-1920 **இறப்பு:** 28-11-1955

என்றும் எங்கள் மனதைவிட்டு அகலாத திருமதி எஸ். செபமாலைமரியை செல்வராணி இம்மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகை எய்திய 5-ம்வருடம் நிகழும் 28-11-60 திங்களன்று பூர்த்தியாகிறது. அன்று மட்டக்களப்பு, அர்ச். வியாகுலமாதா கோயிலிலும், ஊர்காவற்றுறை, சந்தியோகுமையோர் கோவிலிலும் அன்னாரின் ஆத்மஇளைப்பாற்றிக்காகத் திவ்வியபூசைப்பலிகள் நிறைவேறும். இதைக்கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே, சங். சந்நியாச, கன்னியாஸ்திரிகளே, மற்றும் கிறீஸ்தவ அன்பர்களே இரக்கமுள்ளதேவன் இவ்வுக்கு நித்திய இளைப்பாற்றியை அருளுமாறு வேண்டும்படி தாழ்மையுடன் கேட்கின்றோம்.

இவ்வை இழந்து தியருமும்
சுன்னகம், பொலிஸ் இன்ஸ்பெக்டர்
கே. செபமாலையும், பிள்ளைகளும்.



திருமத
றெஜினு ஜேம்ஸ் பாக்கியம்
அமலன் பதம்சேர்ந்த

4-ம் வருட ஞாபகம்

தோற்றம்: 4-5-1917 **மறைவு:** 29-11-1956

"ஆண்டவரே! தேவரீர் அன்று சிலுவைப்பீடத்தில் பலியாகும் நேரம் பச்சாத்தாபக் கள்ளனுக்குக் கிருபைபுரிந்ததுபோல், இந்த ஆத்மத்தின்பேரில் இரக்கமாய் இருந்து அவரை உமது பிரத்தியட்ச தரிசனையின் பாக்கியத்தில் சேர்த்தருளும் ஆமென்."

மண்ணினின்று மறைந்தும் எம் அகக்கண்களைவிட்டு என்றென்றும் பிரியாத எனதி அன்பானமனைவியும், எங்கள் நேச அன்னையுமாகிய திருமதி றெஜினு ஜேம்ஸ் பாக்கியம் அவர்கள் கர்த்தர் திருப்பாதம் சேர்ந்த ஈராண்டாவது ஆண்டு நிகழும் கார்த்திகைத்திங்கள் 29-ம்திகதியோடு பூர்த்தியாகின்றது. அன்றுதினம் இளவாலை, அர்ச். சந்தாஞ்சியார் திருப்பதியில் அவருடைய ஆன்மா சாந்தியடையுமாறு ஓர் திக்கப்பாடற்பூசை நிறைவேறும். இதனைக் கண்ணுறும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் திவ்வியபூசைகண்டு, இவ்வாத்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுநிற்கிறோம்.

இவரை இழந்து தின்புறும்
கணவர், பிள்ளைகள்
இளவாலை.

அர்ச். சவேரியார் திருநாள்
திருநெல்வேலி

இத்திருநாளுக்கு ஆயத்தமான நவதின விழாக்கள் நிகழும்கார்த்திகை 24-ந்திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும். மார்கழி 2-ந்திகதி வேஸ்பர். 3-ந்திகதி சனிக்கிழமைகாலை 7-30மணிக்குத் திருநாள்பாடற்பூசை நிறைவேறும்.

கட்டளைக்குரவர்

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2508

யாழ்ப்பாணம், வைமன்மேட்

1. செல்லையா மகேசனும்
2. பெண் தவமணியும்

— வழக்காளிகள்.

எதிராக

யாழ்ப்பாணம் நாவலர்மேட், நம். 146

1. அருணசலம் இளையதம்பி சின்னத்தரையும்
2. பெண் சீதாலெட்சுமியும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2508-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக்காணியை, 1960-ம்ஆண்டு மார்கழிமீ 31-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5720-ம். 21-8-58 தொடக்கம், 5-5-59 வரைக்கும் ரூபா 4000-க்குப் 12%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 304-92. இக்கோட்டுச் செலவில் ரூபா150 கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் வண்ணர்பண்ணைக் கோயிற்பற்று, வண்ணர்பண்ணை தென்கிழக்கு இறை "பலாயறியான் காடு" பர. நில. இலா. மூன்று (3). இதில் மேற்குப்பக்கமாக 1½ பரப்பும், இதிலிருக்கும் கல்வீட்டில் ஒருபகுதியும், இன்னும் தெற்குப்பக்கத்திலிருக்கும் கிணற்றில் அரைவாசியும், செய்பயிர்வான் பயிர்களும். இத்தப்பரப்பு 1½-க்கும் எல்லை: கிழக்கு—வைத்திலிங்கம் மகள் பத்மாவதிக்குரிய ஆதனம். வடக்கு—நாவலர்மேட்டு. மேற்கு—சின்னத்தரை கைம்பெண் நாகரெத்தினத்துக்கும், ஆறுமுகம் செட்டியாருக்கும், பாலசுப்பிரமணியத்துக்கும், முத்தையா கைம்பெண் பார்பதிக்கும் உரிய ஆதனம். தெற்கு—வண்ணர்பண்ணை சிவன் கோவிலுக்குரிய ஆதனம். இருந்தும், D. 200 இலக்கப் புத்தகத்தில் ஓர் பகுதியாகப் பதியப்பட்டிருக்கிறது.

அ. ஜெகநாதன்,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 6, 2-ம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2709

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

வண்ணர்பண்ணை மேற்கு
சின்னத்தம்பி பொன்னையா

— வழக்காளி.

எதிராக

வண்ணர்பண்ணை மேற்கு

1. சின்னத்தம்பி முருகேசு நேரடியாகவும்
2. காலஞ்சென்ற முருகேசுவின் மனைவி ஆச்சிமுத்துவின் ஆதனத்தின் சட்டப்படி பிரதிநிதியான குமாரசிங்கம் கந்தையாவும்

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2709-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக்காணி 1960-ம்ஆண்டு டிசெம்பர்மீ 31-ந் திகதி (31-12-60) சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2707-70சதம். மேலும் ரூபா 1850-க்கு 17-12-59 திகதி தொடக்கம், 11-1-6% திகதிவரைக்கும் வருடமொன்றுக்கு 100 வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வட்டியும், கோட்டுச்சலவுரூபா 343-65 சதமும்.

காணி விபரம்

வடமாகாணம், யாழப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணர்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணர்பண்ணை மேற்கிறை "ஆண்டிதோட்டமும், பயில்வான் வளவும்" நிலப்பரப்பு 1½ யும், வீடும், செய்பயிர்களும். கிழக்கெல்லைக் காணியின் எல்லையிலிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்புங்கும், அதற்குரிய வழிவாய்க்காலும். இதற்கு எல்லை: கிழக்கு—இளையதம்பி மனைவி நாகமுத்துவுக்குரிய ஆதனம். வடக்கு—நரசிங்கம் வயிரமுத்துவுக்குரியஆதனம். மேற்கு—மாணிப்பாய் ரோட்டு. தெற்கு — கனகசபை மனைவி சிவக்கொழுந்துவுக்குரிய ஆதனம். இதனுடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.

513, கொமிஷனர்மறை வீதி,
கொழும்பு, 14-11-60.

உலகப் பொதுமக்களின்.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற பரிசுத்ததந்தை தோட்டக்காரனைக் கண்டார். அவன் வேலைக்குப் புதிதாக அமர்த்தப்பட்டவன். எனினும், வத்திக்கானிலுள்ள ஒழுங்குகளை அறிந்தவன். வேலையாட்கள் ஒருவராவது பாப்பரசருடன் கதைக்க அனுமதியில்லை. எனவே, அவன் செடிமறைவில் ஒதுங்கினான். சிறிதுநேரத்தின்பின்னர் யாரோ தன்முதுகில் தட்டுவதை உணர்ந்து திரும்பிப்பார்த்தான். பரிசுத்ததந்தை தனக்கருகில் நிற்பதைக் கண்டு திகைத்தான். ஆனால், சந்தோஷம்நிறைந்த இன்முகம் காட்டினார் பரிசுத்த தந்தை. வேலையாளுக்கோ பேச நாவெழவில்லை. பாப்பரசர் அவனிடத்தில் அங்கு வேலைபார்த்த காலம், அவனது குடும்பம், கிராமம் முதலியனபற்றி விசாரித்து இறுதியாக மூன்று (போனஸ்)படி கிடைத்ததா என்று விசாரித்தார். அவனுக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. வத்திக்கான் ஊழியர் ஒவ்வொருவருக்கும் பரிசுத்த பாப்பரசரின் மரணத்தையிட்டும், புதிய பாப்பரசரின் தெரிவையிட்டும், முடிசூட்டுதல் காரணமாகவும் மூன்று மாதம் முழுப்படிச்சம்பளம் வழங்குவது வழக்கம். ஆனால், வேலையாளுக்கோ இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. இதைக் கேள்வியுற்று அவன் அகலவிழித்தான். பாப்பரசர் அவனைப்பார்த்து ஒன்றுக்கும் கவலைப்படாதே நானே நேரடியாக எல்லாக் கருமங்களையும் பார்க்கப்போகிறேன். நல்லதிர்ஷ்டமும், தேவாசியும் உண்டாவதாக என்று கூறிவிட்டுச் சென்றார்.

தமக்கு எவரையும் வரவேற்று உரையாட விருப்பம்என்று பாப்பரசர் கூறியுள்ளார். ஏனெனில், தம்மிடம் வருவோர் பாவசங்கீர்த்தனம் செய்ய விருப்பப்படலாமென்று பாப்பரசர் கூறுவது வழக்கம். ஓர்தோட்டக்காரரின் மகனாகிய அவர் கல்வியிற் தேர்ச்சிபெற்று நூலாசிரியராகிப் பிறநாடுகளின் ஞானத்தூதுவராகி, கருதினலாகியபொழுதும் பொதுமக்கள் பாலுள்ள நாட்டத்தை இழந்தவரல்ல. "மக்கள் என்றும் ஒரேதன்மையினர் என்பதைச் சரித்திரம் காட்டியுள்ளது. எனது குருஅங்கிக் காகவல்ல, மேற்றிராணித்துவ மகுடத்துக்காகவல்ல, கருதினலுக்குரிய அணிகலன்களுக்காகவல்ல நான் றொங்கல்லி என்பதன் நிமித்தமே என்னில் எவரும் பட்சங்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்" என்பார்.

ஒழுக்கத்தை நகைச்சுவையுடன் வெளிப்படுத்த வல்லவர் பாப்பாசர். வெனிஸ்நகரத்தில் அர்ச். மார்க்குவின் ஆலயத்தைப் பார்வையிட மரியாதையற்றமுறையில் உடை அணிந்த சில மாதர்கள் வந்தார்கள். அங்கு அதிமேற்றிராணியாராயிருந்த கருதினல் 'றொங்கல்லி அவர்களை நோக்கி, மாதர்களே! கோடைகாலத்தில் இத்தாலிக்கு வருபவர்கள் கம்பளி உடைஅணிந்து வரவேண்டியதில்லை. தற்காலத்தில் அமெரிக்காவில் உற்பத்தியாக்கப்படும் புதுப்பட்டணிந்து வரலாம். அத்தேசமெங்கும் குளிர்மிகுதி என்பது உண்மையே. ஆனாலும், இத்தாலி சமரேகையில்உள்ள பிரதேசமல்ல. அன்றியும், சமரேகைப் பிரதேசங்களில் உள்ள சிங்கங்கள்கூட உரோமம் அடர்ந்த தோல்களுடன் வாழ்கின்றன" என்றார்.

இத்தகைய சிறப்புள்ள பண்புகள் வாய்ந்த பிதாவை யார்தான்நேசிக்க மாட்டார்? பொதுமக்களின் பொதுத்தந்தை பல்லாண்டு வாழ்க! அவரது ஆட்சி சமரசானத்தை அருள்க!

இந்த ஏழைக்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றுமட்டும் ஏழைகளை உதறிவிட்டதாம். அதைஇவர்கள் கண்டுவிட்டார்களாம். தாங்கள்உதவ முன்வந்துள்ளார்களாம். எப்படியிருக்கிறது பிரசாரம்.

ஏழைக்கத்தோலிக்க மக்களுக்காக இன்று நீலிக்கண்ணீர்வடிக்கும் அரசாங்கம் 'கல்விமசோதா' சம்பந்தமாக இலங்கைமக்கள் எல்லோருக்குமே எகநீதி செலுத்தியுள்ளதா என்பதை யாவது மனச்சான்றைத்தொட்டு விடைபகரட்டும்.

பாமரமக்கள் உள்ளத்தில் துவேசப் பிரசாரத்தின்மூலம் உணர்ச்சியேற்றி விடலாம்; பிரிவையுண்டுபண்ணி விடலாம்; ஒற்றுமையைச் சீர்குலைத்து விடலாம்என்பு அரசாங்கம் பகற்கனவு காண்கிறது.

இந்தச் சூழ்ச்சிவலையில் கத்தோலிக்கமக்கள் ஒருபோதும் சிக்கிவிடமாட்டார்கள். கத்தோலிக்கர்யாவரும் ஒரேமந்தையைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு ஒரே தலைவர்உண்டு.

"பிரித்தாளும்சூழ்ச்சி" எங்கள்மட்டில் நிறைவேறப்போவதில்லை என்பதைப் பகிரங்கமாக அறிவுறுத்த விரும்புகிறேன்.

M. V. சிங்காசா

யாழ்ப்பாணம்,
19-11-60.

திரிகோணமலை மேற்றிராசன.....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

யோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஜோ. ஜே. டேவிட், உபதலைவர்கள்: திரு. ஏ. கே. ஜே. வம்பேக், திரு. எஸ். சவரிராஜா, திரு. பி. சி. ரூகல். செயலாளர்: திரு. கே. எல். இராசேந்திரம். உபசெயலாளர்: திரு. எஸ். பொன்னுத்துரை. நிதியாளர்: திரு. எஸ். ஈ. அந்தோனி.

— நிருபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பாதுகாப்பு இயக்கம்

● உயிலங்குளத்தில்

உயிலங்குளம் கத்தோலிக்க பாட சாலையில்நடைபெற்ற பெற்றோர் கூட்டத் தில் தலைமைவகித்துப்பேசிய அதிவண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமிகளால் உதவிபெறும்பாடசாலைகளை இன்றைய அரசாங்கம் சுவீகரித்துக்கொள்ள முற்பட்டுள்ளதால் மத சுதந்திரம் அடியோடு பறிக்கப்படுகின்றதெனவும், வருங்காலம் சிறார்களுக்கு இருள் சூழ்ந்ததாக இருக்குமெனவும் இதில் பெற்றோர் புத்திக்கூர்மையுடன் இருப்ப தடன் பாடசாலைப் பாதுகாப்பு இயக் கத்தில் பலமாக உழைக்கவேண்டு மெனவும் கூறினர். பின் நாடாப்பதிவு இயந்திரத்தில் பதிவுசெய்யப்பட்ட சில உபந்நியாசங்களும் கடைபெற்றன. எல்லோரும் பாடசாலைப் பாதுகாப்பு இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்று வது என்னும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

● குளமங்காலில்

சென்ற 20-11-60 ஞாயிறுவாரம் திவ்வியபூசைப்பலியின்பின் மேற்படி இயக்கத்தின்சார்பில் விசாரணைப்பங் கைச்சேர்ந்த பெற்றோர், கிறிஸ்தவர்க ளின் பொதுக்கூட்டம் ஒன்று பங்குப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற் றது. அத்தருணம் கத்தோலிக்கபாட சாலைகளை அரசாங்கம் எடுப்பதனால் கத்தோலிக்கருக்கு வரப்போகிற இன் னல்களைக் குறித்து விளக்கம் கொடுக் கப்பட்டது. அதன்பின் ஒரு செயற் குழு நியமிக்கப்பட்டது. இக்கூட்டத் திற்கு வண. கட்டளைக்குரவர் தலைமை தாங்கினர்.

● சில்லாலையில்

சென்றஞாயிற்றுக்கிழமை20-11-60 பிற்பகல் திவ்விய சற்பிரசாத ஆசீர் வாதத்தின் பின் விசாரணைப்பங்கைச் சேர்ந்த கத்தோலிக்க பெற்றோரும் மற்றோரும் மேற்படி இயக்கத்தின்சார் பில் பங்குக்குரிய ஆண்பாடசாலை மண்டபத்தில் பெருந்திரளாகக் கூடி னர். அரசாங்கம் கத்தோலிக்க பாட சாலைகளை எடுத்தல் கத்தோலிக்க பெற்றோரினதும், திருச்சபையினதும் உரிமைகளைப் பாதிக்கும் செயலாகும். இதனால் கத்தோலிக்க சமூகத்திற்கு அநேக கஷ்டங்கள் ஏற்படும் என்று பேச்சாளர் ஒருவர் விளக்கிக் கூறினர். பின்னர் 20 பேரைக்கொண்ட ஒரு நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது. இக்கூட்டத்திற்குத் திரு. இ. இம்மனு வேல் அவர்கள் தலைமைவகித்தார்.

இலங்கைக் கத்தோலிக்கமக்களின் பாப்புப்பற்றைக் கருதிஸ்ஆண்டவர் பாராட்டுகிறார்

இம்மாதம் 5-ம் திகதி பாப்பரச ரின் ஸ்தானுபதியாகிய மகாவந். ஜே. ஆர். நொக்ஸ் ஆண்டவர் அவர்கள் மகாவந். கொழும்பு அதிமேற்றிராணி ஆண்டவர் அவர்கட்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"மகாமேண்மைதங்கிய கருதினல் அகஜியானியன் ஆண்டவரவர்கள் இலங்கைக் கத்தோலிக்கமக்கள் தமக்கு அண்மையில் அளித்த மகத்தான வர வேற்புக்கு தங்கட்கும் மற்றும் மேற்றி ராணிமார்கட்கும் தமது ஆழ்ந்த நன்றி யைத் தெரிவிக்கும்படி எமக்குப் பணித்துள்ளார்.

"விமானநிலையத்தில் நடந்த மகத் தான வரவேற்பு, பட்டண வீதிகளின் இருமருங்கிலும் மலர்ந்த வதனங்களு டன் நின்று ஆர்ப்பரித்த பள்ளிப் பிள்ளைகள், வெவ்வேறு கூட்டங்களில் பங்குபற்றியவர்களின் தொகையும் ஆர்வமும இவைமுதலியன இலங்கைக் கத்தோலிக்கமக்கள் அர்ச். பேதுருவானவரின் ஸ்தானத்தின்பால் கொண்டுள்ள உறுதியான பத்திபற்றுதலையும், பரிசுத்த பாப்பரசர்மட்டில் அவர்களுக்குள்ள களங்கமற்ற அன்பையும் அவர்களுடைய உண்மைப் பத்தியையும் துலாம்பரமாய்க் காண்பித்துக் கருதினல் ஆண்டவர் அவர்களைப் பிரமிப்படையச் செய்துவிட்டன.

"மேற்றிராணிமார்களுக்கும் குருமார்களுக்கு மிடையே திலவும் ஒற்றுமையையும், குருமார் துறவற சகோதர சகோதரிகளின் பரித்தியாக மனப்பான்மையையும் கருதினல் ஆண்டவர் அவர்கள் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள்."

ஆசனக்கோவில் மக்களின் பச்சாத்தாபச் சுற்றுப்பிரகாரம்

தங்கள் பாடசாலைகளுக்கெல்லாம் இந்தவிதமானகதி ஏற்படத் தங்கள் பாவமே காரணமென்பதைக் கண்டு ணர்ந்து கவலைகொண்டவர்கள்போன்று யாழ்ப்பாணம், பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவில் விசாரணைப் பங்கைச்சேர்ந்த கத்தோலிக்கமக்கள் சென்ற 20-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை அமைதியாகநடத்திய செபதப-அதா வது பச்சாத்தாப சுற்றுப்பிரகாரம் எவர்க்குமே சோகத்தின் உணர்ச்சிப் பெருக்கை உண்டுபண்ணுவதாயிருந் தது. அன்றுபிற்பகல் சற்பிரசாதஆசீர் வாதத்தின்பின் பெரும்திருநாளிற் போன்று அங்குசமூகமாயிருந்த சிறு வர்சிறுமிகளும், ஆடவர்களும், பெண் மணிகளுமான சுமார் ஐயாயிரம்மக்கள் நால்வர்நால்வராக அணிவகுத்துநிற்க, மூவர்சேர்ந்து பெரியமரச்சிலுவைஒன் றைச்சுமந்து முன்செல்ல, அவர்களைத் தொடர்ந்து பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சிறுமிகள்செல்ல, இவர்கள் பின்னல் மற்றிருசிலுவைகளைத் தாங் கியவண்ணம் பெண்மணிகள் சென்றார் கள்.

இவர்களைப் பின்தொடர்ந்து ஒரு சிலுவை முன்செல்லப் பல்வேறுபாட சாலைகளைச்சேர்ந்த சிறுவர்களும், இவர்களின்பின்னல் மற்றிருசிலுவை களைத்தாங்கி ஆடவர்களும் செல்ல அரைமைல்நீளமான இத்தச்சுற்றுப் பிரகாரத்தில் கலந்துகொண்டமக்க ளெல்லாம் பிழைதீர்க்கும் மந்திரத்தை யும், பிற சோகரசம்பொருந்திய கீதங் களையும் பாடிக்கொண்டும், செபமாலை ஓதிக்கொண்டும்சென்ற பக்திப்பரவச காட்சியானது அந்தநாளிலே ஆசனக் கோவிலில் நடைபெற்றுவந்த திருப் பாடுகளின் காட்சியில் எம்தெய்வீக நாதன் பாரதூரச்சிலுவையைத் தோ ழிற்சுமந்துசென்றபாவனையான அந்தப் பிரலாப காட்சியைப் பிரதிபலிப்பதா யிருந்தது.

"யேசுவே, எங்கள்பாடசாலைகளைப் பாதுகாரும்," "மாதாவே, எங்கள் பாடசாலைகளுக்காகப் பரிந்துபேசும்" என்று பெரியஎழுத்துகளில் வரையப் பட்டிருந்த மனவல்லயச் செபங்களைக் கொண்டனவாய் இடையிடையே கொண்டுசெல்லப்பட்ட பெரியஅட்டை கள் சுற்றுப்பிரகாரத்தின் குறிக்கோளை எடுத்துக்காட்டி எல்லோரும் அதற் காக உளங்கசிந்து, பெருமூச்செறிந்து வேண்டுதல்செய்யத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்தன. இவ்விதம் பிரதான வீதிகளூடே மூன்றுமைல்தூரத்திற்கு ஒழுங்காகநடைபெற்ற சுற்றுப்பிரகா ரம அமைதியாகத் திரும்பவும் ஆசனக் கோவில்வந்தேரவே, அங்கு பீடத் தின்மேல் பூச்சியமாக வைக்கப்பட் டிருந்த அறையுண்ட பெரியதிருச்சிலு வை அனைவரையும் வரவேற்றது.

அதன்மேல் வண. ஜே. பிரான்சிஸ் சேவியர் சுவாமியவர்கள் உள்ளம் உருக, உணர்ச்சிததும்ப, கண்கள்கலங் கச்செய்த அருமையான பிரசங்கத் திலே "கத்தோலிக்க பிள்ளைகளுக்கு அவர்களின் சமயசூழலாகிய 'வீடு, பாடசாலை, கோவில்'என்பன மிகவும் இன்றியமையாதன; அவர்களை இச் சூழலிலிருந்து பிரிக்கஎண்ணுவது அநீ தியாகும்; கல்விமசோதாவைக் கத் தோலிக்கபெற்றோர் எதிர்ப்பதில் எத் தனை தன்பங்களையும்ஏற்கத் தயாரா யிருக்கவேண்டும்; வேதசாட்சிகளின் அடிச்சுவடுகளைப்பின்பற்ற நாம் தயங் கக்கூடாது" எனும் சாரம்அமையக் குறிப்பிட்டிருந்தார். பின்னர் ஆசனக் கோவில் கட்டளைக்குரவர் கத்தோலிக்க பாடசாலைகளை மரியாயின் மாசற்றஇரு தயத்திற்கு ஒப்புக்கொடுக்கும் செபத் தை யாவரும் மனங்கசிந்து பரலோகத் தைக் கையெடுக்கும்படியாக வாசித்து, அறையுண்ட திருச்சிலுவைகொண்டு அனைவரையும் ஆசீர்வதித்ததும் சுற்றுப் பிரகாரவைபவம் ஆசித்தவாறு நிறை வாயிற்று.

மூன்று பங்குகளில் தபத்தின் சுற்றுப்பிரகாரம்

அன்று 19-ந் திகதி சனிவாரம் நண் பகல் தொடங்கிச் சூரிய அஸ்தமனத்தை, ஏழாலைக் கத்தோலிக்கமக்கள் தங்கள் இல் லங்களில் இருந்து நூற்றுக்கணக்காக அர்ச். இசிதோர் தேவாலயத்தில் திரண்டு நின்றார்கள். தற்போதைய நிலைமையிலே தங்களுக்கு நேரிட்டிருக் கும் ஆபத்தில்நின்று தங்களை அற்புத மாய்க் காப்பாற்ற வேண்டுமென்று அமலனைநோக்கி அழுது பிரலாபித்துப் பல செபதபக் கிருத்தியங்களைச் செய் தனர்.

இவ்வண்ணம் மல்லாகக் கத்தோலிக் கரும் ஒன்றுகூடித் தங்கள் சிற்றாலயத் தில் சிரந்தாழ்த்தி நின்றனர். இன்னும் குளமங்கால் அர்ச். சவேரியார்ஆலயத் தில் அதனைச்சேர்ந்த கத்தோலிக்கரும் குழுமியிருந்து தபச் சுற்றுப்பிரகாரத் திற்குத் தங்கள் செபதபக் கிருத்தியங் கள்மூலம் கிறீஸ்துவை இறைஞ்சினர்.

சுற்றுப்பிரகாரத்தின் நோக்கம் அவர்களுக்கு வண. குரவர்அவர்களால் எடுத்தரைக்கப்பட்டது. அதன்பின் 3 மணிக்கு ஆண்களும், பெண்களும், பிள்ளைகளுமான கிறீஸ்தவர்கள் அதனை ஆரம்பித்துச் சிலுவைகளை மாறிமாறிச் சுமந்து மூன்றுமைல்தூரம் சென்றபின் இரு சுற்றுப்பிரகாரங்களும் மல்லாக வீதியில் சந்திக்கவே எல்லோரும் ஒரு மித்துக் குளமங்கால் அர்ச். சவேரி யார் கோவிலுக்குச் சென்றனர்.

அங்கு வண. பிரான்சீஸ் சேவியர் சுவாமியவர்கள் "சிறுபிள்ளைகளை நம் மிடம் வரவிடுங்கள்" என்ற யேசுபெரு மானின் திருமொழியைவைத்து உரிய பெரிய பிரசங்கம் செய்தபின், குளமங் கால் பங்குக்குரவர் வண. ஆபிரகாம் சுவாமியவர்களால் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டுத் தபச் சுற் றுப்பிரகாரம் இனிதேமுடிவெய்தியது.

இத்துடன் பிரதமருக்கு ஒரு தந்தி யும் பின்வரும் கோரிக்கைகளைத் தெரி வித்தனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

1. எங்கள் பாடசாலைகளைஎடுப்பது சரியல்ல. உங்கள்அரசாங்கத்திற்காக இந்தத் தபச் சுற்றுப்பிரகாரத்தில் பிரார்த்தித்தோம். உங்களிடம் தய வாய்க் கேட்கிறோம், எங்கள் பாடசாலை களுக்கு அரசாங்கம் உதவி செய்யா விடினும் நாங்கள் யாசகஞ்செய்தாவது எங்கள்பிள்ளைகளைப் படிப்பிப்போம்.

2. உங்கள் அரசாங்கத்தின் அநீத நிட்டத்தையிட்டு நாங்கள் மனம் வருந்துகிறோம். இதற்கு அடையாள மாக எங்கள்வீடுகளில் கறுத்தக்கொடி கள் ஏற்றுகிறோம். பிள்ளைகளையும் பாடசாலை போகாமல் தடுக்கிறோம்.

திரிகோணமலை மேற்றிராசனக் கத்தோலிக்க ஐக்கியசங்க ஆண்டு மகாநாடு — 1960

— மட்டுநகர், தாண்டவன்வெளி

இம்மகாநாடு இவ்வாண்டு ஐப்பசித் திங்கள் 27-ந் திகதிமுதல் நிரிதின ஆராதனைகளுடன் ஆரம்பமானது. திரிதின ஆராதனையில் வண. குருப்பிர சாதிகள் எல். ஆர். அன்ரனி, ஹென்றி பொன்னையா, வின்சென்ற் ஞானப்பிர காசம் ஆகியோர் கலந்துகொண்டனர். கிறீஸ்துஇராசா திருநாளாகிய 30-ந் திகதி ஞாயிறுகாலை **மேற்றிராசன பரிபாலகரான அதிவண. ஜெரோம்டீசா** சுவாமி அவர்களால் திவ்விய பலிபூசை ஒப்புக்கொடுக்கப் பட்டது. அச்சமயம தாண்டவன் வெளி பரிசுத்த வியாகுலமாதா ஆல யப் பங்குக் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர் களால் பக்தி, உருக்கம், வீரம்செறிந்த பிரசங்கம் நிகழ்த்தப்பட்டது. ஏராள மான கத்தோலிக்கர் பங்குபற்றினர்.

பூசைமுடிவானதும் மேற்படி பங் குக் கத்தோலிக்க சங்கத்தாரால் பிரதி நிதிகளுக்குக் காலைப்போசனம் வழங் கப்பட்டது. அதன்பின் ஆண்டு மகா நாட்டுக்கூட்டம் கிளெனி ஆண்கள் கழகத்தில் **திரு. யோ. ஜே. டேவிட்** அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. விசாரணைப்பங்குகளின் கட்டளைக்குர வர்களும், நூற்றுக்கணக்கான அங்கத் தினரும் சமூகம்கொடுத்தனர். சென்ற கூட்டவரலாறு, ஆண்டறிக்கை, வரவு செலவு என்பன சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம்பெற்றன.

பின்னர், "இலங்கைவாழ் அந்நியர் இறக்கவேண்டியிருக்கும் ரூபா 400/- வரிப்பணம், பொருளீட்டும் முயற்சி களில் இறங்கியுள்ள அந்நியர்களைப் பொறுத்தவரையில் மட்டுமே நியாய மானதாகப்பட்டக் கூடுமாகையால், இலங்கைவாழ் அந்நிய மதபோதகர் களை இவ்வரியிலிருந்து விலக்கிவைக் கும்படி திரிகோணமலை மேற்றிராசன ஐக்கியசங்கம் கௌரவ நிதிமந்திரியவர் களைப் பணிவுடன் வேண்டிக்கொள்ளு கிறது" என்னும் பிரேரணை நிறைவேற் றப்பட்டது. புதிய ஆண்டின் உத்தி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 24-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org